ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# நம்பெருமாள் விஜயம்

(மலர் – 1) July 2007



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

"ஸ்ரீ அஹோபில தாஸன்" க. ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

# அடியேன் உரை

ஸ்ரீ:பதியான ஸ்ரீமந் நாராயணன் இந்த உலகில் உள்ள நம் போன்ற ஜீவன்களைக் கரையேற்ற வேண்டும் என்று எப்போதும் நினைத்தபடி உள்ளான். அதற்கு ஏதுவாக ஆசார்யர்களை நமக்கு அளித்தபடி உள்ளான். இப்படிப்பட்ட ஆசார்யர்கள் நமக்கு உதவும் பொருட்டு பல்வேறு க்ரந்தங்களை இயற்றிபடி உள்ளனர். இவற்றில் பூர்வாசார்யகளின் பல க்ரந்தங்கள் இன்று நம்மிடம் உள்ளபோதும், பல அறிய க்ரந்தங்கள், காலத்தின் வெள்ளத்தில் மறைந்து விட்டன. எஞ்சியுள்ள க்ரந்தங்களில் பலவும் இன்று வழக்கத்தில் இல்லாத மணிப்ரவாள நடையிலும், வடமொழியிலும் அமைந்துள்ளன. இவற்றை நாம் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும் என்றால், அவற்றை நடைமுறை மொழிக்கு மாற்றினால் அன்றி இயலாது என்பது அடியேனது தாழ்வான கருத்தாகும்.

இந்த எண்ணத்தின் விளைவே, **நம்பெருமாள் விஜயம்** என்று பெயரிடப்பட்ட இந்த நூலாகும். இந்த நூல் ஒவ்வொரு மாதமும்(ஏகாதசி அல்லது த்வாதசி நாளன்று) **www.namperumal.com** என்ற இணைய தளத்தில் வெளியிடப்படும். இந்த நூலில், பூர்வாசர்யர்களின் க்ரந்தங்கள் மூலத்துடனும், அவற்றுக்கான நடைமுறைத் தமிழாக்கத்துடனும் வெளியிடப்படும். பூர்வாசார்யர்களின் மூலக்ரந்தம் இந்த நூலில் நீல நிறத்திலும், அதன் கீழ் அதற்கான தமிழாக்கம் வேறு நிறத்திலும் அமைக்கப்படும்.

இந்த இணைய தளத்தில் உள்ள இடப்பற்றாக்குறை காரணமாக, நடப்பு மாதத்திற்கான ப்ரதி மட்டுமே இந்த இணைய தளத்தில் வைக்கப்படும். பழைய ப்ரதிகள் வேண்டுவோர் **groups.yahoo.com/emperumanar** என்ற இணைய தளத்தில் பதிவு செய்து கொண்டு, அங்கு உள்ள **Files Section** மூலம் பெறலாம்.

இந்த முயற்சி தொடர உங்கள் கருத்துக்கள், ஆலோசனை ஆகியவை அவசியம் தேவையாகும். அவற்றை அடியேனின் sridharan_book@yahoo.co.in என்ற முகவரியில் மெயில் அனுப்பினாலும், அல்லது **groups.yahoo.com/emperumanar** என்பதில் தெரிவித்தாலும் நல்லது.

**ஸர்வம் க்ருஷ்ணார்ப்பணம் … வாஸுதேவம் ஸர்வம்**

தாஸன்

ஸ்ரீ அஹோபில தாஸன் **க. ஸ்ரீதரன்**

1. ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்
2. ஸ்ரீபாஷ்யம்
3. ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரம்
4. முமுக்ஷுப்படி
5. சிறிய திருமடல்
6. அமலனாதிபிரான்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரெங்கநாயகி சமேத ஸ்ரீ ரெங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீரங்கராஜஸ்தவம்

**இந்த ச்லோகம் உண்டாகிய பின்னணி**

ஸ்ரீராமானுஜரால் பெரியபெருமாளின் திருக்கோயிலை நிர்வகித்து வரும்படி பணிக்கப்பட்ட பட்டர், அந்தப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி வந்தார். ஒருமுறை அந்தக் கோயிலின் ஆறாவது ப்ராகாரத்தின் மதிள் சுவரானது பழுதடைந்து சரிந்து நின்றது. அந்த மதிளை, வீரஸுந்தரப்ரஹ்மராயன் என்ற மன்னன் சரிசெய்யத் தொடங்கினான். அப்போது அந்த மதிள், நேராக இல்லாமல், கூரத்தாழ்வானின் மிகவும் ப்ரியமான சிஷ்யர்களில் ஒருவரான பிள்ளைப்பிள்ளையாழ்வான் என்பவரின் திருமாளிகை (வீடு) அருகே சற்று வளைந்து சென்றது (அவரது வீடு மதிளின் பாதையில் நின்றது). இதனைக் கண்ட அரசன், அவரது திருமாளிகையை இடிக்க முயன்றான். இதனை அறிந்த பட்டர், அரசனிடம் இவ்வாறு செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்த, அதனை ஏற்காமல் அவன் இடித்துவிட்டு மதிளை நேர்ப்படுத்தினான். அதன் பின்னர், பட்டரிடம் கோபம் கொண்ட அவன், அவ்வப்போது பட்டருக்குத் தொல்லைகள் கொடுத்தவண்ணம் இருந்தான். இதனால் பட்டர் ஒருநாள் யாரிடமும் அறிவிக்காமல், ஸ்ரீரங்கத்தை விட்டு அகன்று, திருக்கோட்டியூருக்குச் சென்று விட்டார்.

இப்படி உள்ளபோது, ஒருநாள் அந்த அரசன் இறந்தான். இந்தச் செய்தியை பட்டரிடம் பிள்ளைப்பிள்ளையாழ்வான் ஓடோடி வந்து தெரிவித்தார். இதனக் கேட்ட பட்டர், தனது விரோதி அழிந்தான் என்று மகிழவில்லை. மாறாக, இறுதிவரை அந்த அரசன் திருந்தாமலேயே இறந்தானே என்று வருந்தினார். அதன் பின்னர், தனது வளர்ப்புத் தந்தையான நம்பெருமாள் வாசம் செய்யும் இடமாகிய ஸ்ரீரங்கத்திற்கு ஓடி வந்தார். அவ்விதம் வரும்போது, காவேரி தொடக்கமாக, ஸ்ரீரங்கத்தை வர்ணித்தபடியே வந்தார். இந்த விதமாக, ஸ்ரீரங்கராஜஸ்தவம் என்ற அற்புதமான நூல் உருவானது.

இந்த நூல் இரண்டு பகுதிகள் கொண்டது. பூர்வ ஸதகம் என்ற முதல் பகுதியில், 147 ச்லோகங்கள் உள்ளன. இரண்டாம் பகுதியான உத்தர ஸதகத்தில் 105 ச்லோகங்கள் உள்ளன.

தனியன்

ஸ்ரீபராசர பட்டார்ய: ஸ்ரீரங்கேச புரோஹித:
ஸ்ரீவத்ஸாங்கஸுத: ஸ்ரீமாந் ச்ரேயஸே மேஸ்து பூயஸே

பொருள் – நம்பெருமாளின் ஸந்நிதியில் புராணம் வாசித்தல், வேத விண்ணப்பம் செய்தல், திருமஞ்சனக் கட்டியம் கூறுதல் போன்ற கைங்கைர்யங்களை உடையவரும், கூரத்தாழ்வானின் திருக்குமாரரும், கைங்கர்யம் என்ற செல்வம் எப்போதும் நிலைபெற்றவரும் ஆகிய ஸ்ரீபராசரபட்டர் எனக்கு நிறைந்த நன்மைகளை அளிக்க வேண்டும்.

# பூர்வ ஸதகம்

1. ஸ்ரீவத்ஸ சிஹ்நமிச்ரேப்ய: நம உக்திம் அதீமஹே
   யத் உக்தய: த்ரயீகண்ட்டே யாந்தி மங்கள ஸூத்ரதாம்

பொருள் – எந்த ஒருவரின் ஸ்ரீஸூக்திகள், வேதம் என்ற பெண்ணின் கழுத்தில் திருமாங்கல்யமாக உள்ளனவோ, அப்படிப்பட்டவரான கூரத்தாழ்வானிடம் நாம் நம: என்று கூறியபடி உள்ளோம்.

விளக்கம் – இந்த உலகில் ஒரு கன்னிப்பெண் உள்ளாள் என்று வைத்துக் கொள்வோம். அவளுக்குத் திருமணம் ஆகும் வரையில், பலரும் அவள் தனக்கே சொந்தம் என்று நினைத்திருக்கக்கூடும். திருமணம் ஆன பின்னரே அவள் ஒருவனுக்கு மட்டுமே சொந்தமாகிறாள். இது போன்று, கூரத்தாழ்வானின் நூல்களுக்கு முன்னர், வேதம் என்ற பெண் தங்களையே போற்றுவதாகப் பல தெய்வங்களும் எண்ணி வந்தன. இந்த நிலையில் உதித்த ஆழ்வானின் நூல்கள், அந்தப் பெண்ணிற்கும் ஸ்ரீமன் நாராயணனுக்கும் இடையே திருமணம் நடத்தி வைத்து, அந்த நூல்களே வேதப்பெண்ணின் கழுத்தில் தாலியாகவும் நின்றது. ஆக ஆழ்வானின் நூல்களுக்குப் பிறகே வேதம் என்பது ஸ்ரீமன் நாராயணனின் உடைமையானது என்று கருத்து.

2. ராமானுஜ பதச்சாயா கோவிந்த ஆஹ்வா அநபாயிநீ
   தத் ஆயத்த ஸ்வரூபா ஸா ஜீயாத் மத் விச்ரமஸ்த்தலீ

பொருள் – (இந்த ச்லோகம் மூலம் எம்பார் என்ற கோவிந்தபட்டரைத் துதிக்கிறார்) எம்பெருமானாரின் திருவடிகளை விட்டு எப்போதும் அகலாமல், அந்தத் திருவடிகளின் நிழலாகவே உள்ளவர், அந்தத் திருவடிகளுக்கு மட்டுமே வசப்பட்டவர், கோவிந்தபட்டர் என்ற திருநாமம் கொண்டவர் – இப்படிப்பட்ட எம்பார், ஸம்ஸார தாபத்தினால் வருந்தும் எனக்கு இளைப்பாறும் இடமாக உள்ளார். அவருக்குப் பல்லாண்டு.

3. ராமானுஜமுனி: ஜீயாத் யோ ஹரேர் பக்தி யந்த்ரத:
   கலிகோலாஹல க்ரீடா முதாக்ரஹம் அபாஹரத்

பொருள் – கலிபுருஷனின் தாண்டவம் என்னும் பிசாசை, ராமானுஜர் பகவத் பக்தி என்ற யந்த்ரம் கொண்டு விரட்டினார். அப்படிப்பட்ட எம்பெருமானாருக்குப் பல்லாண்டு.

விளக்கம் – கலியும் கெடும் கண்டு கொண்மின் என்றும், இராமானுசன் மறை தேர்ந்துலகில் புரியும் நல்ஞானம் பொருந்தாதவரைப் பொரும் கலியே என்றும், இறந்தது வெங்கலி என்றும் போற்றப்பட்டர். இப்படிப்பட்ட ராமானுஜரின் திருவடிகளின் தொடர்பு பெற்றவர்களைக் கலிபுருஷன் அண்டமாட்டான்.

4. விதாய வைதிகம் மார்க்கம் அகௌதஸ்க்ருத கண்டகம்
   நேதாரம் பகவத் பக்தேர் யாமுநம் மநவாமஹை

பொருள் – (இதன் மூலம் ஆளவந்தாரைத் துதிக்கிறார்) ஆளவந்தார் அவதரிப்பதற்கு முன்னர், வைதிக மார்க்கம் என்பது, தவறான வாதங்கள் என்னும் முள் நிறைந்து இருந்தது. அந்தப் பாதையை முள் அற்றதாக்கி, பகவத் பக்தியை நன்கு வளரச் செய்த ஆளவந்தாரை நாம் எப்போதும் த்யானிப்போமாக.

5. நௌமி நாதமுநிம் நாம ஜீமுதம் பக்தி அவக்ரஹே
   வைராக்ய பகவத் தத்வ ஜ்ஞாந பக்தி அபிவர்ஷுகம்

பொருள் – (இதன் மூலம் நாதமுனிகளைத் துதிக்கிறார்) நாதமுனிகளின் காலத்திற்கு முன்பு, பக்தி என்னும் தண்ணீர் கிடைக்காமல் இருந்தது. அந்த நேரத்தில் வைராக்யம் (மற்ற விஷயங்களில் உள்ள பற்றுதல்களைத் தவிர்த்தல்), பகவானைப் பற்றிய உண்மையான அறிவு, பக்தி ஆகியவற்றை மழையாக ஒரு மேகம் பொழிந்தது. இப்படிப்பட்ட மேகமாகிய நாதமுனிகளைத் துதிக்கிறேன்.

6. ரிஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ண த்ருஷ்ணா தத்வம் இவோதிதம்
ஸஹஸ்ர சாகரம் ய: அத்ராக்ஷீத் த்ராவிடீம் ப்ரஹ்ம ஸம்ஹிதாம்

பொருள் – (இதன் மூலம் நம்மாழ்வாரைத் துதிக்கிறார்) தனக்கு எம்பெருமானை அடையவேண்டும் என்ற ஆவல், கலியின் வலிமையால் தன்னைப் பற்றாமல் நிற்பவர்களையும் தன்னைப் பற்றச் செய்யவேண்டும் என்ற பகவானின் ஆவல் – இவை இரண்டும் சேர்ந்து ஒரு வடிவமாக வந்ததோ என்று எண்ணும் படியாக இவரது (நம்மாழ்வாரின்) திருமேனி உள்ளது. பகவத் கருணையால் உபநிஷத்துக்களின் ஸாரமான திருவாய்மொழி என்னும் ஆயிரம் தமிழ் பாசுரங்களை பகவான் மீது உள்ள ப்ரியத்தினால் அருளிச் செய்தார். இப்படிப்பட்ட நம்மாழ்வாரை நாம் வணங்குகிறோம்.

7. நம: ஸ்ரீரங்கநாயக்யை யத் ப்ரூவிப்ரம பேதத:
ஈச ஈசிதவ்ய வைஷம்ய நிம்ந உந்நதம் இதம் ஜகத்

பொருள் – எந்த ஒரு பிராட்டியின் புருவங்களின் நெறிப்பு மூலமே இந்த உலகமானது, உயர்ந்தவர்கள்–தாழ்ந்தவர்கள் என்ற வேறுபாடு உடையதாக மாறுகிறதோ, அந்தப் பிராட்டியான ஸ்ரீரங்கநாச்சியாருக்கு நமஸ்காரங்கள்.

விளக்கம் – இந்த உலகில் உள்ளவர்கள் செல்வம் படைத்தவர்களாகவும், ஏழைகளாகவும் இருப்பதற்கு, பெரியபிராட்டியின் புருவங்களின் அசைவே காரணம் என்றார். அவளது அனுக்ரஹம் கிட்டியவர்கள் உயர்ந்தும், கிட்டாதவர்கள் தாழ்ந்தும் போகின்றனர் என்று கருத்து.

8. ஸ்ரீஸ்தந ஆபரணம் தேஜ: ஸ்ரீரங்கேசயம் ஆச்ரயே
சிந்தாமணிம் இவ உத்வாந்தம் உத்ஸங்கே அநந்த போகிந:

பொருள் – ஆதிசேஷனால் கக்கப்பட்ட சிந்தாமணி போன்று ஒரு வஸ்து உள்ளது. அந்த மணியானது, பெரியபிராட்டியின் ஸ்தனங்களின் ஆபரணமாக உள்ளது. அந்த வஸ்து திருவரங்கத்தில் பள்ளி கொண்டுள்ளது. அந்த வஸ்து மிகவும் தேஜஸ்ஸுடன் உள்ளது, இப்படிப்பட்ட அந்த வஸ்துவை (பெரிய பெருமாளை) நான் அடைகிறேன். (பெரியபெருமாளை வஸ்து என்று கூறலாமா என்றால், கவிதையாகப் போற்றும்போது இது ஏற்கத்தக்கதே).

9. அஸ்தி வஸ்து இதமித்தந்த்வ ப்ரஸங்க்யாந பராங்முகம்
ஸ்ரீமதி ஆயதநே லக்ஷ்மீ பதலாக்ஷா ஏக லக்ஷணம்

பொருள் – இந்த வஸ்துவின் ஸ்வரூபம் இத்தன்மை உடையது என்றும், இதனிடைய ஸ்வபாவம் இத்தன்மை உடையது என்றும் அறிய இயலாதபடி உள்ளது. (பின் எப்படி பெரியபெருமாளை அறிவது என்றால்) ஸ்ரீரங்கநாயகியின் திருவடிகளில் பூசப்பட்ட செம்பஞ்சுச்சாறு எந்த ஒரு வஸ்துவின் மீது உள்ளதோ, அத்தகைய வஸ்துவானது, திருவரங்கத்தின் பெரியகோயிலில் உள்ளது.

10. லக்ஷ்மீ கல்பலதா உத்துங்க ஸ்தந ஸ்தபக சஞ்சல:
ஸ்ரீரங்கராஜ ப்ருங்க: மே ரமதாம் மாநஸ அம்புஜே

பொருள் – பெரியபிராட்டியான ஸ்ரீரங்கநாச்சியார் ஒரு கற்பகக் கொடி போன்று உள்ளாள். அவளது ஸ்தனங்கள், அந்தக் கற்பகக் கொடியில் உள்ள மலர்க்கொத்து போன்று உள்ளன. அந்த மலர்க்கொத்துகளை, ஸ்ரீரங்கநாதன் என்ற கருவண்டு வட்டம் அடித்தபடி உள்ளது. இப்படிப்பட்ட அந்த வண்டானது, எனது மனம் என்ற தாமரை மலரில் எப்போதும் மிகவும் மகிழ்வுடன் வாசம் செய்யவேண்டும்.

**....தொடரும்**

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீபாஷ்யம்

1. அகில புவந ஜந்மஸ்தேம பங்காதிலீலே
விநத விவித பூதவ்ராத ரக்ஷைகதீக்ஷே
ச்ருதிசிரஸிவிதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே
பவது மம பரஸ்மிந் சேமுஷீ பக்திரூபா

2. பாராசர்யவச: ஸுதாம் உபநிஷத்துக்தாப்திமத்யோத்த்ருதாம்
ஸம்ஸாராக்நி விதீபந வ்யபகத ப்ராணாத்ம ஸஞ்ஜீவநீம்
பூர்வாசார்ய ஸுரக்ஷிதாம் பஹுமதிவ்யாகாத தூரஸ்திதாம்
ஆநீதாம் து நிஜாக்ஷரை: ஸுமநஸோ பௌமா: பிபந்து அந்வஹம்

## ப்ரம்ஹ சூத்திரம் – ஓர் அறிமுகம்

ஸ்ரீமத் பகவத் இரமானுஜர் அருளிய ஸ்ரீபாஷ்யம் என்பது வியாச பகவான் அருளிய ப்ரம்ஹ சூத்திரத்திற்கான உரையாகும். எனவே முதலில் ப்ரம்ஹ சூத்திரம் என்பதை அறிந்து கொள்வது அவசியமாகும். நமது இந்து மதத்தில் ஆறு அடிப்படை அம்சங்கள் என்று உண்டு – ஸ்ருதி, ஸ்ம்ருதி, இதிகாசம், புராணம், ஆகமம் மற்றும் தரிசனம் என்பது ஆகும்.

ஸ்ருதி – நான்கு வேதங்களும், 108 உபநிஷத்துகளும் இணைந்து ஸ்ருதி என வழங்கப்படுகின்றன. நான்கு வேதங்களும், நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன – ஸம்ஹிதை, ப்ராஹ்மணம், ஆரண்யகா, உபனிஷத் என்பவையாகும்.

ஸ்ம்ருதி – வேதங்களிலும் உபநிஷத்துக்களிலும் கூறப்பட்டவைகளுக்கு மேலும் விளக்கம் அளிப்பதற்காகவும், அவற்றில் உள்ள கூற்றுகளை மெய்ப்பிப்பதற்காகவும், பல ரிஷிகளால் இயற்றப்பட்டவை ஆகும்.

தர்சனம் – வேதங்களில் உள்ளவற்றைக் கண்டு அறியும் வழிமுறையே தரிசனம் எனப்படுகின்றது. இது ஷட்தரிசனம் என்னும் பெயருக்கு ஏற்றாப்போல், ஆறு விதமாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும், ஒவ்வொரு மகரிஷியால் உருவாக்கப்பட்டது. அவையாவன:

நியாயம் – கௌதம மகரிஷி, வைசேஷிகம் – கநாட மகரிஷி, சாங்க்யம் – கபில மகரிஷி, யோகம் – பதஞ்ஜலி மகரிஷி, மீமாம்ஸம் – ஜைமினி மகரிஷி, வேதாந்தம் – பத்தராயண மகரிஷி.

மேலே உள்ள ஆறு விதமான தர்சனங்களில் முதல் ஐந்தும், ஸ்ரீமந் நாராயணனே அனைத்தும் என்று முழுவதுமாக ஒப்புக்கொள்ளவில்லை. ஒவ்வொரு தத்துவமும் தாங்கள் கூறியவையே அனைத்தையும் இயக்குவதாக வாதம் புரிந்தன. ஆறாவது தத்துவமான வேதாந்தத்தின் மூலம் வேதவியாஸரான பத்தராயணர், வேதங்கள் அனைத்தாலும் போற்றப்பட்டவனும் அனைத்தையும் இயங்கச் செய்பவனாக உள்ளவனும் ஸ்ரீமந் நாராயணனே என்று நிரூபித்தார்.

மேலே உள்ள ஆறு தத்துவங்களில், மீமாம்ஸமும் வேதாந்தமும் சற்றே தொடர்பு உள்ளன. எனவே, மீமாம்ஸத்தினை பூர்வ மீமாம்ஸம் என்றும் வேதாந்தத்தினை உத்தர மீமாம்ஸம் என்றும் கூறுவர்.

மீமாம்ஸம் என்ற சொல்லுக்குப் புனித நூல்களில் உள்ளவற்றை ஆராய்தல் என்று பொருள். வேதங்களில் உள்ள பொருளையும், கூறப்படும் விவரங்களின் அடிப்படையிலும், வேதங்களை பிரிக்கலாம். அவையாவன – கர்ம காண்டம் (கடமைகள், கர்மங்கள் குறித்தன), உபாஸனா காண்டம் (வழிபாட்டு முறைகள்)

மற்றும் ஞான காண்டம் (பரம்பொருளைக் குறித்தன). சிலர் தர்ம காண்டம் மற்றும் ப்ரஹ்ம காண்டம் என்றும் பிரிப்பார்கள்.

பூர்வ மீமாம்ஸத்தில், கர்ம மற்றும் உபாஸனா காண்டம் குறித்து ஆராயப்பட்டுள்ளது. உத்தர மீமாம்ஸத்தில், வேதங்களில் பிற்பகுதியான ஞான காண்டம் குறித்து ஆராயப்பட்டுள்ளது. இப்படியாக ஆராயப்பட்டு, முடிவுகளாக அறிவிக்கப்பட்டவை சூத்திரங்கள் எனப்படும். இவை அந்த முனிவரின் இறுதியான தீர்ப்பு போன்றதாகும்.

சூத்திரங்களை நாம் புரிந்து கொள்வது என்பது மிகவும் சிரமமான செயலாகும் – காரணம், இரண்டு வரிகளில் உள்ள சூத்திரத்தில் மிகவும் ஆழமான பொருள் புதைந்து காணப்படும். எனவே இவற்றை விளக்க நமக்கு உரைகள் தேவை. இந்த உரைகள் ஐந்து வகைப்படும் – பாஷ்யம், வ்ருத்தி, வர்த்திகம், வ்யாக்யானம் மற்றும் திப்பாணி என்பவையாகும்.

உத்தர மீமாம்ஸத்தில் உள்ள கருத்துக்களை நிரூபிப்பதற்காக, பத்தராயணரால் இயற்றப்பட்டதே ப்ரஹ்ம சூத்திரமாகும். இதில் உள்ள சூத்திரங்களின் எண்ணிக்கையில் பல்வேறு பேதங்கள் உள்ளன – 545, 555 மற்றும் 564 என்பன. நாம் ஸ்ரீபகவத் இராமானுஜரின் ஸ்ரீபாஷ்யத்தில் உள்ள கணக்கின்படி 545 என்றே எடுத்துக் கொள்வோம்.

## அத்தியாயங்கள்

ஸ்ரீபாஷ்யம் நான்கு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுது. அவையாவன:

1. ஸமங்வய அத்தியாயம் – அனைத்து வேதங்களும் பரமபுருஷனாகிய ஸ்ரீமந் நாராயணைக் குறித்தே பேசுகின்றன, நம் வாழ்வின் குறிக்கோள் அவனே என்று கூறுகின்றது.

2. அவிரோத அத்தியாயம் – மற்ற ஐந்து தர்சனங்களும் கூறுகின்றபடி, ஸ்ரீமந் நாராயணன் ஒருவன் மட்டும் அனைத்தையும் நிகழ்த்தவில்லை என்ற வீண்வாதம் மறுக்கப்பட்டு, தகர்க்கப்படுகின்றது.

3. ஸாதனா அத்தியாயம் – இப்படிப்பட்ட பரமபுருஷனை அடையும் வழிமுறைகள், முக்தி பெறும் உபாயங்கள் கூறப்படுகின்றன.

4. பலா அத்தியாயம் – பலா என்றால் பழம் ஆகும். நாம் அவனை அடைந்த பின்னர் நமக்கு கிடைக்கின்ற நன்மைகளை கூறப்படுகின்றன.

## பாதங்கள்

ஒவ்வொரு அத்தியாயமும் நான்கு பாதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆக ஸ்ரீபாஷ்யத்தில் 16 பாதங்கள் உள்ளன. ஒவ்வொரு பாதமும், ஒரு மூலக்கருத்தினை ஆராய்கின்றது. ஒவ்வொரு பாதமும் பல அதிகரணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதிகரணம் என்ற சொல் – ஒரு குறிப்பிட்ட விஷயத்தைக் குறித்து ஏற்படும் சர்ச்சையை விளக்கி, பின்னர் அந்த சர்ச்சை தீரும்படி ஒரு தீர்ப்பையும் அளிப்பது ஆகும். நாம் நமது விளக்கவுரையில் ஒவ்வொறு சூத்திரத்தையும் ஒரு ப்ரத்யேக எண் குறியீட்டில் காண்போம். உதாரணமாக 1–2–3 என்றால் முதல் அத்தியாயம், இரண்டாம் பாதம், மூன்றாம் சூத்திரம் என்று பொருள்.

## சூத்திர அமைப்பு

ஸ்ரீபாஷ்யத்தில் ஒவ்வொரு சூத்திரமும் மூன்று அல்லது நான்கு பகுதிகளைக் கொண்டது. இந்தப் பகுதிகள்:

1. சூத்திரம் – முதல் பகுதியாக வேதவ்யாஸர் அருளிய ப்ரஹ்ம சூத்திரத்தின் மூலம் உள்ளது. இது ஸம்ஸ்ருத மொழியில் உள்ளதாகும்.

2. பொருள் – இந்தப் பகுதியில் சூத்திரத்தின் பொருள் என்ன என்று உள்ளது. ஆனால், இது மிகவும் விளக்கமாக இருக்காது.

3. பூர்வபக்ஷம் – இதன் மூலம் இந்தச் சூத்திரத்தில் கூறப்படும் குறிப்பிட்ட முடிவிற்கு, இதுவரை எழுந்த ஆட்சேபங்கள் கூறப்படும். இப்படி ஆட்சேபம் எழுப்புகின்றவர்கள் பூர்வபக்ஷிகள் எனப்படுகின்றனர். சில சூத்திரங்களில் இந்தப் பகுதி இருக்காது.

4. ஸித்தாந்தம் – இதன் மூலம் பூர்வபக்ஷிகளின் வாதம் மறுக்கப்பட்டு நிரூபிக்கவும் செய்யப்படுகின்றது.

இனி நாம் ப்ரஹ்ம சூத்திரத்திற்கு ஸ்ரீ பகவத் ராமானுஜர் அருளிச் செய்த உரையான ஸ்ரீபாஷ்யத்தைக் காண்போம். ஸ்ரீ ராமானுஜர் அருளிச் செய்த க்ரந்தங்களின் மிகவும் கடினமான க்ரந்தம் இதுவேயாகும். அவரையும், அவர் பின்னே அவதரித்த நமது பூர்வாசார்யர்களையும் நமது மனதில் நன்கு ப்ரார்த்தனை செய்து கொண்டு, நமது பயணத்தைத் தொடங்குவோம்.

முதல் இரண்டு அத்யாயங்கள் மிகவும் கடினமாக உள்ளதால், மூன்றாம் அத்யாயத்தில் இருந்து ஸ்ரீபாஷ்யத்தை அறிவது வழக்கத்தில் உள்ள ஒன்றாகும். நாமும் முதலில் மூன்றாம் அத்யாயத்திலிருந்து தொடங்குவோம்.

## அத்தியாயம் –3– ஸாதனா அத்யாயம்

இது உபாஸனா அத்யாயம் என்றும் கூறப்படும். முதல் இரண்டு அத்யாயங்களில் இந்த உலகத்திற்குக் காரணம் ப்ரஹ்மமே என்று நிரூபிக்கப்பட்டது. அத்தகைய ப்ரஹ்மத்தை அடையும் உபாயம் என்ன என்று ஆராயப்பட உள்ளது. இந்த அத்தியாயத்தில் 55 அதிகரணங்கள் உள்ளன. இவற்றில் 181 சூத்திரங்கள் அடங்கியுள்ளன.

### முதல் பாதம் – வைராக்ய பாதம்

இந்த பாதத்தில் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஜீவனுக்குள்ள தோஷங்கள் யாவை என்று கூறப்பட உள்ளன. இவற்றைக் விளக்கினால் மட்டுமே, இது போன்ற தோஷங்கள் அற்ற ப்ரஹ்மத்தை அடைய வேண்டும் என்ற வைராக்யம் ஒரு ஜீவனுக்கு ஏற்படும். எனவே முதலில் இவை கூறப்பட்டன.

#### அதிகரணம் – 1 – ததந்தர ப்ரதிபத்த்ய அதிகரணம்

இந்த அதிகரணத்தில், சாந்தோக்ய உபனிஷத் கூறும் கருத்தான – ஜீவன் ஓர் உடலை விட்டு வெளியே கிளப்பும்போது (மரணத்தின் பின்னர்), பஞ்ச பூதங்களுடன் கூடியவனாக, சூக்ஷ்ம ரூபத்துடன் செல்கிறான் – என்று நிரூபிக்கப்பட உள்ளது.

**3–1–1 – ததந்தர ப்ரதிபத்தௌ ரம்ஹதி ஸம்பரிஷ்வக்த: ப்ரச்ந நிரூபணாப்யாம்**

பொருள் – ஜீவன் மற்றொரு உடலை அடையச் செல்லும் போது, பஞ்சபூதங்களுடன் கூடிய உடலுடன் செல்கிறான். உபநிஷத்தில் உள்ள கேள்வி பதில் மூலம் இப்படியே உணர்த்தப்பட்டது.

பாஷ்யம் – கடந்த இரு அத்யாங்களில் – இந்த ஜகம் அனைத்திற்கும் ஒரே காரணமாக உள்ளவனும், எந்தவிதமான தாழ்வான தோஷமும் சிறிதும் இல்லாதவனும், எல்லையற்ற குணங்களைக் கடல் போன்று கொண்டவனும், மற்ற அனைத்தையும்விட முற்றிலும் வேறுபட்டவனும் ஆகிய ப்ரஹ்மமே (ஸ்ரீமந் நாராயணன்). மோக்ஷத்தை விரும்பும் முமுக்ஷுக்களால் உபாஸிக்கப்பட வேண்டும் என்று உபனிஷத்துக்கள் கூறுகின்றன, என உறுதி செய்தார். இதனை ஸ்ம்ருதிகள் கொண்டு பலர் ஆக்ஷேபம் செய்ய, அவற்றை ஸ்ம்ருதிகள் மூலமே நிராகரித்தார். அவர்கள் கூறியபடி, வேதாந்தங்களில் முரணான வரிகள் ஏதும் இல்லை என்று நிரூபணம் செய்தார். ஆக, கடந்த இரு அத்யாயங்களில் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை உணர்த்தினார். இனி, ப்ரஹ்மத்தை அடையும் உபாயம் மற்றும் அதனை அடையும் வழிகள் குறித்துக் கூற உள்ளார்.

இந்த மூன்றாம் அத்யாயத்தில், அத்தகைய வழியான உபாஸனம் பற்றிக் கூறப்பட உள்ளது. உபாஸனத்தைத் தொடங்குவதற்கு முன்பாக அடையப்பட வேண்டிய பொருள் தவிர மற்ற விஷயங்களில் உள்ள பற்றுதல் நீக்கமும் (வைராக்யம்), அடையப்பட வேண்டிய பொருள் மீது மட்டுமே தீராத பற்றுதலும் இருப்பதே உபாஸனையை அடைவதற்கான வழியாகும். முதல் இரண்டு பாதங்களில், பல உலகங்களில் திரிகின்ற ஜீவனின் நிலைகளான ஜாக்ரத்(விழிப்பு நிலை), ஸ்வப்நம்(கனவு நிலை), ஸுஷுப்தி(தூக்க நிலை) மற்றும் மூர்ச்சை(மயக்க நிலை) ஆகியவை தோஷங்களாகக்(குறைகளாக) கூறப்பட்டன. இவை ஏதும் ப்ரஹ்மத்திற்குக் கிடையாது என்றும், அந்தப் ப்ரஹ்மம் அனைத்துத் திருக்கல்யாண குணங்களின் இருப்பிடமாக உள்ளது என்றும் கூறப்பட்டது. இதன் மூலம், ப்ரஹ்ம விஷயம் குறித்து வைராக்யம் ஏற்படும் நிலை உண்டாகும்.

## (இந்த சூத்திரத்தில்) ஆராயப்படும் விஷயம்

ஜீவன் ஓர் உடலை விட்டுக் கிளம்பி(உயிர் பிரிந்த பின்), மற்றோர் உடலை எடுக்கும் முன்பாக, பஞ்சபூதங்கள் இணைந்த சூட்சம உடலுடன் செல்கிறானா அல்லது தனித்துச் செல்கிறானா?

## பூர்வபக்ஷம்

ஜீவன் செல்லும் இடங்களில் எல்லாம் அவனுக்குத் தேவையான பூதசூட்சம (பூதங்களுடன் கூடிய சூட்சம உடல்) உடல் எளிதில் கிட்டும் என்பதால், அவன் வெளியே கிளம்பும்போது பூதசூட்சமங்களுடன் செல்வதில்லை (தனித்தே கிளம்புகிறான்) என்றே கூற வேண்டும். இனி வரும் பல சூத்திரங்களில், பூர்வபக்ஷியின் ஐயத்திற்கான விளக்கத்தைக் கூறி, அவை அனைத்தையும் சூத்திரக்காரர் நிராகரிக்க உள்ளார். அதன் பின்னர் தனது ஸித்தாந்தமான – பூதசூட்சமங்களுடன் சேர்ந்தே செல்கிறான் – என்று நிரூபிக்க உள்ளார்.

## ஸித்தாந்தம்

ஜீவன் பூதசூட்சமங்களுடன் கூடியவனாகவே செல்கிறான். ப்ரஹ்ம சூத்திரம்(2–4–17) – ஸம்ஜ்ஞா மூர்த்திக்லுப்தி – பெயர், ரூபம், மாறுதல் – என்று கூறியது. இந்த இடத்தில் உள்ள மூர்த்தி என்ற பதம் உடலைக் குறிக்கும். அந்தப் பதமே இந்தச் சூத்திரத்தில் ஏதத்ர என்று கூறப்பட்டது. ததந்த்ரப்ரதிபத்தௌ – மற்றோர் உடலை அடையும்போது, ஸம்பரிஷ்வக்த: – பூதசூட்சமங்களுடன் இணைந்து, ரம்ஹதி – செல்கிறான் என்பதே இங்கு உள்ள கருத்து. எங்கு உள்ள கருத்து? ப்ரச்ந நிரூபணாப்யாம் – கேள்வி பதில் பகுதிகள் ஆகும். சாந்தோக்ய உபநிஷத்தின் பஞ்சாக்னி வித்யை என்ற பகுதியில் கீழே உள்ள கேள்விகளும் பதில்களும் உள்ளன.

ஆருணி என்பவரின் பிள்ளை ஸ்வேதகேது என்பவனாவான். இவன் ஒரு சமயம் பாஞ்சால தேசத்தின் அரச சபைக்குச் சென்றான் இங்கு ப்ரவாஹணன் என்பவன் ஆட்சி செய்து கொண்டிருந்தான். அந்த அரசன் ஸ்வேதகேதுவிடம், யாகம் முதலானவற்றை இயற்றி முடித்தவர்கள் எங்கு செல்கின்றனர் (உயிர் பிரிவ்த பின்னர்), அவர்கள் மீண்டும் எந்தப் பாதையில் உலகிற்கு மீண்டும் வருகின்றனர், தேவயானம் பித்ருயானம் என்ற பாதைகளின் வேறுபாடு, ஸ்வர்க்க லோகத்தை அடையாதவர்கள் யார்?, என்று நான்கு வேள்விகள் கேட்டான். இறுதியாக கீழே உள்ள ஐந்தாவது கேள்வியையும் கேட்டான். சாந்தோக்ய உபனிஷத்(5–3–3) – வேத்த யதா பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தி – ஐந்தாவது ஆஹுதியாக அளிக்கபடும் நீர் என்பது எவ்விதம் புருஷன் என்று கூறப்படுகிறது என்று அறிவாயா – என்று கூறியது. இந்தக் கேள்விக்கு விடை அளிக்கும் விதமாக, ஸ்வர்க்கம் என்பதையே அக்னியாகக் கொண்டு பதில் உள்ளது(ஆஹுதி என்றால் யாகத்தீயில் இடும் பொருள்கள் ஆகும். இங்கு ஸ்வர்க்கம் என்பது அக்னி, சூரியன் என்பது சமித்துக்கட்டை, சூரியகிரணங்கள் என்பது புகை, சந்திரன் என்பது தணல், நக்ஷத்திரம் என்பது தீப்பொறிகள் என்று கொள்ளப்பட்டன). இதனைத் தொடர்ந்து, சாந்தோக்ய உபனிஷத்(5–4–2) – தஸ்மிந் ஏதஸ்மிந் அக்னௌ தேவா: ச்ரத்தாம் ஜுஹ்வதி தஸ்யா ஆஹுதே: ஸோமராஜாபவதி –

ஸ்வர்க்கம் என்னும் அக்னியில், இந்த்ரியங்கள் (தேவா) அனைத்தும் இணைந்து ச்ரத்தை என்ற நீரை, ஆஹூதியாக அளிக்கின்றன, இதன் மூலம் ஸ்வர்க்கலோகம் சென்ற ஜீவன், ஸோமராஜா என்ற பெயருடன் அழகான உடலை அடைகிறான் என்று கூறியது.

ஆக ஸ்வர்க்கம் என்ற அக்னியில், தேவர்கள் என்று கூறப்பட்ட ஜீவனின் இந்த்ரியங்கள், ச்ரத்தை எனப்படும் நீரை ஆஹூதியாக இடுகின்றன, இந்த ச்ரத்தை என்பது ஸோமராஜா என்பதாகிற அழகிய ரூபம் எடுக்கிறது. இத்தகைய அமிர்தம் போன்ற உடல் கொண்ட ஸோமராஜா என்பவனை (ஜீவனின் உருவமே இது, தனது புண்ணீய கர்மபலன்கள் அனுபவிக்க இது போன்ற உடலை அவன் எடுக்கிறான், அந்தக் கர்ம பலன்கள் அனைத்தும் முடிவடைந்து விட்ட நிலை வரும்போது...), பர்ஜன்யம்(மழை) என்ற அக்னியில் ப்ராணன்கள்(ஸோமராஜாவை) இடுக்கிறன. அப்போது ஸோமராஜாவின் உடலானது நீராக மாறி, ஜீவனுடன் சேர்ந்து மழை ஆகிறது. அந்த மழையை பூமி என்ற அக்னியில் அதே இந்த்ரியங்கள் இடுகின்றன(ஹோமம் செய்கின்றன என்று கருத்து). அப்போது அந்த மழை நீரானது நெல் போன்ற உணவுகளாக மாறுகின்றது. அந்த உணவை புருஷன் (மனிதன்) என்ற அக்னிக்கு அதே இந்த்ரியங்கள் ஹோமதிரவியமாக இடுகின்றன. புருஷனிடம் சென்ற அன்னம்(உணவு) என்பது ரேதஸாக(ஆண்விந்து) மாறுகிறது. அந்த விந்துவை இந்த்ரியங்கள், பெண் என்ற அக்னியில் ஆஹூதியாக இடுகின்றன. இப்படியாக விடப்பட்ட விந்துவானது, அந்தப் பெண்ணிடம் கர்ப்பமாக மாறுகிறது. இவ்விதம் பதில் அளித்து, தொடர்ந்து(சாந்தோக்ய உபநிஷத் 5–9–1) – இதி து பஞ்சம்யாமாஹூதாவாப: புருஷவசஸோ பவந்தி – இப்படியாகவே ஐந்தாவது ஆஹூதியாக விடப்படும் நீர் என்பது(நீர் என்பது விந்துவைக் குறித்தது) புருஷனாகப் பெயர் அடைகின்றது – என்று கூறப்பட்டது.

இதன் மூலம் ஐந்தாவது ஆஹூதியாக விடப்பட்ட நீர், புருஷனாக மாற்றம் அடைகிறது. இவ்விதம் கூறப்பட்டதால் சூட்சம வடிவில் உள்ள நீரானது இப்போது மனித வடிவம் பெறுகிறது என்று கூறுவதாகும். இதன் மூலம் ஜீவன் தான் செல்லும்போது, புதிய உடல் எடுக்க உதவும் பூதங்களுடன் சூட்சமமாகவே செல்கிறான் என்று உணரலாம்.

### பூர்வபக்ஷம்

சாந்தோக்ய உபனிஷத்(5–9–1) – ஆப: புருஷவசஸ: – நீரானது புருஷனாகிறது – என்று கூறுவதன் மூலம் நீரான ரேதஸ் என்பது புருஷனாக உடல் எடுப்பது புரிகிறது. எனவே புதிதாக உடலைப் பெறப்போகும் ஜீவனுடன் நீருக்கு மட்டுமே தொடர்பு இருப்பதை உணரலாம். இப்படி இருக்கும் போது அனைத்து பூதங்களுடன் சேர்ந்து ஜீவன் செல்வதாக எவ்விதம் கூற இயலும்? இதற்கு விடையாக அடுத்த சூத்திரம் உள்ளது.

**....தொடரும்**

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வேதாந்த மகாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரம்

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ
வேதாந்தாச்சார்ய வர்யோமே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியில் – ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

# ஸ்ரீ குருபரம்பராஸாரம்

குருப்யஸ்தத்குருப்யச்ச நமோவாகமதீமகே
வ்ருணீமகே ச தத்ரா ஆத்யெள தம்பதீ ஜகதாம் பதீ

பொருள் – எங்களுடைய ஆசார்யனின் பொருட்டும், அவர்களது ஆசார்யர்க்களின் பொருட்டும் நம என்ற பதத்தை நாங்கள் அடிக்கடி கூறுகிறோம். மேலும் இந்த உலகின் அதிபதியாக உள்ள தம்பதிகளான ஸ்ரீமன் நாராயணனையும், மகாலக்ஷ்மியையும் நாங்கள் ப்ரார்த்திக்கிறோம்.

பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார்
  தண் பொருநல் வரும் குருகேசன் விட்டுசித்தன்
துய்ய குலசேகரன் நம் பாணநாதன்
  தொண்டரடிப்பொடி மழிசை வந்த சோதி
வையம் எலாம் மறை விளங்க வாள் வேல் ஏந்தும்
  மங்கையர்க்கோன் என்று இவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித்
  தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே

பொருள் – புரிந்து கொள்வதற்கு மிகவும் கடினமான உபநிஷத்துக்களின் உண்மையான பொருள்களை நாம் ஆழ்வார்கள் அருளிச்செய்த இனிமையான தமிழ்ப் பாசுரங்கள் மூலம் தெளிவாகப் புரிந்து கொண்டோம். இத்தகைய ஆழ்வார்கள் – பொய்கைமுனி, பூதமுனி, பேயாழ்வார்,மிகவும் குளிர்ந்த தாமிரபரணி ஆற்றின் கரையில் அவதரித்த நம்மாழ்வார்(குலசேகசன்), விட்டுசித்தன்(பெரியாழ்வார்), தூய மனதுடைய குலசேகரன், நம்முடைய திருப்பாணழ்வார், தொண்டரடிப் பொடி ஆழ்வார், திருமழிசையில் அவதரித்த திருமழிசை ஆழ்வார், இந்த உலகெங்கும் வேதங்களின் ஒளி வீசும்படியாக வாளும் வில்லும் ஏந்திய திருமங்கை மன்னன் – ஆகியோர் ஆவர்.

இன்பத்தில் இறைஞ்சுதல் இல் இசையும் பேற்றில்
  இகழாத பல் உறவு இல் இராகம் மாற்றில்
தன்பற்றில் வினை விலக்கில் தகவோக்கத்தில்
  தத்துவத்தை உணர்த்துதலில் தன்மையாக்கில்
அன்பர்க்கே அவதரிக்கும் மாயன் நிற்க
  அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்
  தொல்வழியே நல்வழிகள் துணிவார்க்கட்கே

பொருள் – இந்த உலகில் தனது அடியார்களுக்காக, அவர்களுக்கு அடைக்கலமாக, ஓர் ஆயனாக க்ருஷ்ணன் அவதரித்தான். அவன் தனது அடியார்கள் இந்த உலக விஷயங்களில் வைக்கும் பற்றுதலை தன் மீது

வைக்கும்படியும், பாவங்களை விலக்கும்படியும், எல்லையற்ற இன்பத்தை உணரும்படியும், தத்துவங்களை விளங்கும் படியும் செய்வதற்கு க்ருஷ்ணன் தயாராக இருந்தான். இருந்தாலும் மதுரகவியாழ்வார், அறிந்துக்கொள்ளக் கடினமான வேதங்களை தமிழில் உரைத்த நம்மாழ்வாரின் திருவடிகளையே பற்றினார். ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுபட இதுவே உறுதியான் பாதை என்று காண்பித்தார்.

## ஆசார்யனே மோக்ஷ உபாயம்

பாபிஷ்ட்ட: க்ஷத்ரபந்துச்ச புண்டரீகச்ச புண்யக்ருத்
ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாத் ஆசார்யைவான் பவேத்

என்று ஆசார்யவத்தையே ஸர்வருக்கும் மோக்ஷகாரணமென்று அறுதியிட்டார்க்கள். முமுக்ஷுவுக்கு ஆசார்ய வம்சம் பகவானளவுஞ் செல்ல அனுஸந்திக்க வேண்டுமென்று ஓதப்பட்டது.

ஸ்ம்ருதிகளில் – பாபிஷ்ட: க்ஷத்ர பந்துஸ்ச புண்டரீகக்ஷ புண்யக்ருதா ஆசார்ய வத்தயா முக்தௌ தஸ்மாத் ஆசார்யவான் பவேத் – மிகவும் பாவியான க்ஷத்ரபந்துவும், மிகவும் புண்ணியம் செய்த புண்டரீகனும் மோக்ஷம் பெற்றனர் – எப்படியெனில் அவர்களின் ஆசார்யன் உதவியால் ஆகும். ஆகவே, அனைவருக்கும் மோக்ஷம் கிட்டுவதன் வழி ஒரு ஆசார்யனைப் பெறுவதே ஆகும் என்று முடிவு செய்தனர். மோக்ஷத்தில் விருப்பம் உள்ளவன் (முமுக்ஷு) தனது ஆசார்ய பரம்பரையை பகவான் வரை நீட்டிக்கவேண்டும்.

## பகவானே முதல் ஆசார்யன்

தம் இமம் ஸர்வஸம்பன்னம் ஆசார்யை பிதரம் குரும் என்றும், மம அபி அகில லோகானாம் குருர் நாராயணோ குரு: என்றும், த்வமேவ பந்துச்ச குரும்த்வமேவ என்றும், குருரஸி கதிச்ச ஸி ஜகதாம் என்றும் சொல்லுகிறபடியே ஸர்வலோகத்துக்கும் பரமாசார்யனான ஸர்வேச்வரன் – (1) ப்ரஹ்மாவுக்கு அடியிலே வேதங்களைக் கொடுத்தும் அவற்றிற்கு அபகாரம் பிறந்தபோது மீட்டுக்கொடுத்தும் இவன்முகமாக சாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்தும், (2) இவன் புத்ரர்களான ஸனத்குமாராதிகளை, ஸ்வபமாகதவிஜ்ஞானா நிவ்ருத்திம் தர்மமாஸ்திதா: என்னும்படி பண்ணி, அவர்கள் முகங்களாலே ஹிதப்ரவர்த்தனம் பண்ணுவித்தும், (3) இப்படியே மற்றும் நாரத பராசர சுக சௌனகாதிகளான பல மகர்ஷிகளையிட்டு அத்யாத்ம ஸம்ப்ரதாயம் குலையாதபடி நடத்தியும், (4) க்ருஷ்ணத்வைபாயனம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும், கோ ஹ்மன்யோ பூமி மைத்ரேய மகாபாரத க்ருத்வேத்? என்றும், மஹஷை: கீர்த்தனாத் தஸ்ய பீஷ்ம: ப்ராஞ்ஜ்ஜலி: அப்ரவீத் என்றும் சொல்லுகிறபடி நிற்கிற வ்யாஸாதிகளை அனுப்ரவேசித்து மகாபாரத சாரீரகாதிகளை ப்ரவர்த்திப்பித்தும், (5) ஹம்ஸ மத்ஸ்ய ஹயக்ரீவ நரநாராயண கீதாசார்யாத்யவதாரங்களாலே தானே வெளிநின்று தத்துவ ஹித புருஷார்த்தங்களை ப்ரகாசிப்பித்தும், (6) தான் அருளிச் செய்த அர்த்தங்களை எல்லாம் ஸ்ரீபீஷ்மர் முதலான ஞானாதிகரையிட்டு மூதலிப்பித்தும், (7) பாஞ்சாராத்ரஸ்ய க்ருத்ஸ்னஸ்ய வக்தா நாராயணாஸ்வயம் என்கிறபடியே அடியிலே தான் அருளிச்செய்த பகவஞ்சாஸ்த்ரத்தை ப்ராம்மணை: க்ஷத்ரியை: வைச்யம்ச்சூத்ரச்ச க்ருதலக்ஷணை: அர்ச்சனீயச்ச சேவ்யச்ச நித்யயுக்தை: ஸவகர்மஸு ஸாத்வதம் விதிமஸ்தாய கீத ஸங்கர்ஷிணேன ய: த்வாபரஸ்ய யுகஸ்யாந்தே ஆதௌ கலியுகஸ்ய ச என்கிறபடியே அவஸரங்களிலே ஆவிஷ்கரித்தும், (8) பூர்வோத்பன்னேஷு பூதேஷு தேஷு தேஷு கலௌ ப்ரபு: அனுப்ரவிச்ய குருதே யத் ஸமீகிதமச்யுத: என்கிறபடியே பராங்குச பரகாலாதி ரூபத்தாலே அபினவமாக ஒரு தசாவதாரம் பண்ணி, மேகங்கள் ஸமுத்ரஜலத்தை வாங்கி ஸர்வோபஜீவ்யமான தண்ணீராக உமிழுமா போலே வேதார்த்தங்களில் வேண்டும் ஸாரதமாம்சத்தை ஸர்வருக்கும் அதிகரிக்கலான பாஷையாலே ஸங்க்ரகித்துக்காட்டியும், (9) இப்படி தான் ப்ரவர்த்திப்பித்த ஸத்பதத்துக்கு ப்ரகடராயும் ப்ரச்சன்னராயுமிருந்துள்ள பாஷாண்டிகளால் உபரோதம் வாராமைக்காக, ஏஸாக்ஷாத் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தனும், மக்னான் உத்தரதே லோகான் காருண்யாச்சாஸ்த்ரபாணினாஏ என்றும், (10) பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து என்றும் சொல்லுகிறபடியே அகஸ்த்யஸேவிதமான தேசத்திலே அனேக தேசிகாபதேசத்தாலே அவதரித்தருளினான். இத்தைக் கணிசித்து :

கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா:
கசித் க்வசித் மகாபாகா த்ரமிடேஷு ச பூரிச:
தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயகிதீ
காவேரீ ச மகாபாகா ப்ரதீசீ ச மகாநதீ

என்று மகர்ஷி அருளிச்செய்தான்.

ஸர்வேஸ்வரனே அனைத்து உலகங்களுக்கும் பரமாச்சார்யன் என்பதைக் கீழே உள்ள வரிகளிலிருந்து உணரலாம்:

* மகாபாரதம் ஸபாபர்வம் (41–21) – தம் இமம் ஸர்வஸம்பன்னம் ஆசார்யாயை பிதரம் குரும் – அவனே (க்ருஷ்ணன்) ஆசார்யனும், தந்தையும் குருவும் ஆவான்.
* விஷ்ணு புராணம் (5–1–14) – மமாபி அகிலலோகாநாம் குருர் நாராயணோ குரு: – அனைத்து உலகங்களுக்கும் குருவான நாராயணன் எனக்கும் குரு ஆவான்.
* ஸ்தோத்ர ரத்னம் (60) – குரு: அஸி கதிச்சாஸி ஜகதாம் –அனைத்து உலகங்களுக்கும் குருவாகவும், அவர்கள் சென்றடையும் இடமாகவும்.

இப்படிப்பட்ட ஸர்வேஸ்வரன் செய்த உபாயங்கள் பின் வருமாறு:

1) வேதங்கள் தொலைந்தபோது அவற்றை ப்ரம்மனுக்கு மீட்டுத்தருவதாக வாக்குக் கொடுத்து, அதே போன்று மீட்டுக் கொடுத்து, அவன் மூலமாகவே வேத ஜ்ஞானத்தை உலகத்திற்கு அளித்தான்.

2) மகாபாரதம் சாந்தி பர்வம் (349–71) – ஸ்வபமாகதவிஜ்ஞானா நிவ்ருத்திம் தர்மமாஸ்திதா: – ப்ரம்மனின் புத்திரர்களான ஸனத் குமாரர்கள் உண்மையை அறியவும், தர்ம வழியில் செல்லவும் (மோக்ஷ உபாயம்) செல்லவும் உதவினான்.

3) உபநிஷத்துக்களின் நெறி மறையாதபடி நாரதர், பராசரர், சுகர், ஸௌனகர் ஆகியோர் மூலம் காப்பாற்றினான்.

4) விஷ்ணு புராணம் (3–4–5) – க்ருஷ்ண த்வைபாயனம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும், கோ ஹ்மன்யோ பூமி மைத்ரேய மகாபாரத க்ருத்வேத்? – க்ருஷ்ண த்வைபாயனர் என்று அழைக்கப்படும் வ்யாஸர் ஸ்ரீமன் நாராயணனே ஆவார். மைத்ரேயரே. மகாபாரதத்தை இயற்றுவதற்கு இந்த உலகில் வேறு யார் உள்ளனர்? மேலும், மகாபாரதம் ஆதி பர்வம் (114–40) – மஹஷை: கீர்த்தனாத் தஸ்ய பீஷ்ம: ப்ராஞ்ஜ்ஜலி: அப்ரவீத் – உயர்ந்த வ்யாஸரின் பெயரை மிகுந்த மரியாதையுடனும் கைகளைக் கட்டியபடியும் பீஷ்மர் கூறினார் – இப்படியாக வ்யாஸர் முதலானவர்களாக நாராயணன் தோன்றி மகாபாரதம், ப்ரஹ்ம ஸூத்ரம் ஆகியவற்றைப் படைத்தான்.

5) நாராயணனே ஹம்ஸமாகவும், மத்ஸ்யமாகவும், ஹயக்ரீவனாகவும், நரநாராயணனாகவும், கீதாசார்யனாகவும் அவதாரம் செய்து தத்துவங்களையும் மோக்ஷ உபாயங்களையும் அருளினான்.

6) தான் அருளிய அனைத்தையும் பீஷ்மரும் முதலான ஞானிகள் மூலம் வெளிப்படுத்தினான்.

7) மகாபாரதம் (சாந்தி பர்வம் 359–68) – பாஞ்சாராத்ரஸ்ய க்ருத்ஸ்னஸ்ய வக்தா நாராயணாஸ்வயம் – நாராயணனே பாஞ்சராத்ர சாஸ்த்ரம் முழுமையும் உரைத்தான். அந்த சாஸ்த்ரம் மறைந்து விட்டபின் அவனே அதனை த்வாபரயுகத்தின் முடிவிலும் கலியுகத்தின் தொடக்கத்திலும் உபதேசித்தான். அதனை ப்ராம்மணர்கள், க்ஷத்ரியர்கள், வைச்யர்கள் மற்றும் சூத்திரர்கள் அவரவர்களுக்கு உரிய வழிகளில் பகவானுக்குத் தொண்டு செய்யும்படியாக, பாஞ்சராத்ரத்தை ஸங்கர்ஷணன் மூலமாக உபதேசித்தான். இவர்கள் தங்கள் ஆசார்யனிடம் பஞ்ச சம்ஸ்காரம் செய்து கொண்டு அவனை ஆராதனம் செய்யும்படிச் செய்தான்.

8) விஷ்ணுதர்மம் (108–50) – பூர்வோத்பன்னேஷு பூதேஷு தேஷுதேஷு கலௌ ப்ரபு: அனுப்ரவிச்ய குருதே யத் ஸமீகிதமச்யுத: – கலியுகத்தில் அச்யுதன் இந்த உலகில் பிறந்த உயர்ந்த மனிதர்களின் உள்ளே புகுந்து தனக்கு விருப்பமானவற்றைச் செய்கிறான் என்பதற்கு ஏற்றபடி அவன் பராங்குசன்

(நம்மாழ்வார்), பரகாலன் (திருமங்கை மன்னன்) போன்ற பத்து அவதாரங்களை எடுத்தான். இப்படியாக அவன் செய்தது என்ன? மேகங்கள் கடலிலிருந்து தண்ணீரை உறிஞ்சி எடுத்து, அதனை அனைத்து உயிர்களுக்கும் ஆதாரமான மழையாகப் பொழிவதுபோல, அனைத்து வேதங்களின் கருத்துக்களையும் எடுத்து அனைவரும் எளிதாகப் படிக்கும் தமிழில் (நாலாயிரத்திவ்யப்பிரபந்தம்) அளித்தான்.

10) இப்படியாகத் தான் ஏற்படுத்திய பாதைக்கு – வெளிப்படையாக நாராயணனை மற்றவர்களோடு சமமாக நினைப்பவர்கள், வேதத்தின்படி நடக்காதவர்கள், நாராயணனைத் தாழ்வாகப் பேசுபவர்கள்– ஆகியோர் மூலம் தடை ஏற்படாமல் இருப்பதற்காக அவன் செய்தது என்ன? ஜயாக்கிய ஸ்ம்ஹிதை– ஸாக்ஷாத் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தனும், மக்னான் உத்தரதே லோகான் காருண்யாச்சாஸ்த்ரபாணினா– அறியாமை என்னும் இருளில் மூழ்கிய இந்த உலகத்தை நாராயணன் தானாகவே தனது கருணை காரணமாக, சாஸ்திரங்கள் எனும் கைகொடுத்து மேலே உயர்த்தினான் – என்று கூறியது. பெரியாழ்வாரும் தனது திருமொழியில்(5–2–8 ) – பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து – என்று கூறினார் அன்றோ? ஆக நாராயணன் அகஸ்தியரின் இந்தப் பகுதியில் பல ஆசார்யர்களாக அவதரித்து அருளினான். இதனை ஸ்ரீமத் பாகவதம் பின்வருமாறு கூறுகிறது:

கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா:
கசித் க்வசித் மகாபாகா த்ரமிடேஷு ச பூரிச:
தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயகிதீ
காவேரீ ச மகாபாகா ப்ரதீசீ ச மகாநதீ

இதன் பொருள் – கலியுகத்தில் நாராயணனின் அடியார்கள் உயர்ந்த பக்தியுடன் கூடியவர்களாக திராவிட நாட்டின் இங்குமங்கும் பல இடங்களில் பிறப்பார்கள், அவர்கள் தாமிரபரணி, வைகை, பாலாறு, காவேரி, மகாநதி ஆகிய நதிகள் ஓடும் இடங்களில் அவதரிப்பர்.

<u>வைணவ குரு பரம்பரை</u>

இவ்வாசார்யர்களில், ஈச்வரமுனிகள் பிள்ளை நாதமுனிகள். இவர் ந்யாயதத்துவமென்கிற சாஸ்த்ரமும் யோக ரஹஸ்யமும் அருளிச் செய்தார். இவருக்கு ஸ்ரீமதுரகவிகள் முதலாக ஸம்ப்ரதாயபரம்பரையாலும் திருவாய்மொழி முகத்தாலும் யோகதசையிலே ஸாக்ஷாத்க்ருதராயும் நம்மாழ்வார் ஆசார்யரானார். நாதமுனிகள் பிள்ளை ஈச்வர பட்டாழ்வான். ஈச்வர பட்டாழ்வான்பிள்ளை ஆளவந்தார். இவர் அருளிச் செய்த ப்ரபந்தங்கள் – ஆகமப்ராமாண்யமும், புருஷநிர்ணயமும், ஆத்மஸித்தி – ஈச்வரஸித்தி – ஸம்வித்ஸித்தி எங்கிற ஸித்தித்ரயமும், கீதார்த்த ஸங்க்ரஹமும், ஸ்தோத்ரமும், சதுச்லோகியுமாக எட்டு. ஆளவந்தார்ப்பிள்ளை சொட்டை நம்பி. சொட்டை நம்பி பிள்ளை என்னாச்சான். என்னாச்சான் பிள்ளைகள் நால்வர். இவர்களில் ஒருவர் பிள்ளையப்பர். பிள்ளையப்பர்ப்பிள்ளை தோழப்பர். தோழப்பருக்குப் பெண்பிள்ளைகள் இருவர்.

இந்த ஆசார்யர்களில் (மேலே உள்ள ஸ்ரீமத் பாகவதம் கூறிய வரிகளில் உள்ள ஆசார்யர்கள்) முதலில் ஈச்வரமுனியின் பிள்ளையான நாதமுனிகள் ஆவார். இவர் நமக்கு ந்யாய தத்துவம் மற்றும் யோகரஹஸ்யம் என்பதை அருளினார். இவருக்கு மதுரகவியாழ்வாரின் உபதேசப் பரம்பரை உண்டு. மேலும் திருவாய்மொழியை உபதேசமாகப் பெற்று, மேலும் யோகம் பெற்றார். இதனால் நம்மாழ்வார் இவருக்கு நேரிலே வந்து ஆசார்யனானார். நாதமுனிகளின் பிள்ளை ஈச்வர பட்டாழ்வான். ஈச்வர பட்டாழ்வானின் பிள்ளை ஆளவந்தார் ஆவார். ஆளவந்தார் அருளிச் செய்த பிரபந்தங்கள் எட்டாகும் – ஆகமப்பிரமாண்யம், புருஷநிர்ணயம், ஆத்ம ஸித்தி, ஈச்வர ஸித்தி, ஸம்வித் ஸித்தி, கீதார்த்த சங்க்ரஹம், ஸ்தோத்ர ரத்னம் மற்றும் சதுஸ்லோகி என்பவை ஆகும். ஆளவந்தாரின் பிள்ளை சொட்டை நம்பி, அவரது பிள்ளை என்னாச்சான், என்னாச்சானின் நான்கு பிள்ளைகளில் ஒருவர் பிள்ளையப்பர், பிள்ளையப்பரின் பிள்ளை தோழப்பர். தோழப்பருக்கு இரண்டு பெண் குழந்தைகள்.

நாதமுனிகள் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்த முதலிகள் உய்யக்கொண்டார், குருகைக்காவலப்பன், நம்பி கருணாகரதாஸர், ஏறு திருவிடையார், திருக்கண்ணமங்கையாண்டான், வானமாதேவியாண்டான், உருப்பட்டுராச்சான்பிள்ளை,

சோகத்துராழ்வான் என்பர். உய்யக்கொண்டார் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தவர்க்கள் ஐவர். அவர்களாகிறார் மணக்கால் நம்பி, திருவல்லிக்கேணிப் பாண் பெருமாளறயர், சேட்டலூர் செண்டலங்காரர், ஸ்ரீபுண்டரீகதாஸர், உலகப்பெருமாள் நங்கை. மணக்கால் நம்பி ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தவர்க்கள் ஐவர். அவர்களாகிறார் ஆளவந்தார், தெய்வத்துக்கரசு நம்பி, கோமடத்துத்திருவிண்ணகரப்பன், சிறுப்புள்ளூர் ஆவுடையபிள்ளை, ஆச்சி.

நாதமுனிகளின் திருவடிகளை பற்றி நின்ற சிஷ்யர்கள் – உய்யக்கொண்டார், குருகைக்காவலப்பன், நம்பிகருணாகரதாஸர், ஏறு திருவுடையார், திருக்கண்ணமங்கை ஆண்டான், வானமாதேவி ஆண்டான், உருப்பட்டூர் ஆச்சான் பிள்ளை, சோகத்துராழ்வான் ஆகிய எட்டு பேர்கள். உய்யக்கொண்டாரின் சிஷ்யர்கள் ஐவர் – மணக்கால் நம்பி, திருவல்லிக்கேணி பாண் பெருமாள் அரையர், சேட்டலூர் செண்டலங்காரர், ஸ்ரீ புண்டரீகதாஸர் மற்றும் உலகப்பெருமான் நங்கை ஆவர். மணக்கால் நம்பியின் திருவடிகளை அண்டி இருந்தவர்கள் ஐவர் – ஆளவந்தார், தெய்வத்துக்கரசு நம்பி, கோமடத்துத் திருவிண்ணகரப்பன், சிறுப்புள்ளூர் ஆவுடையப் பிள்ளை மற்றும் ஆச்சி ஆகியோர் ஆவர்.

ஆளவந்தார் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தவர்கள் பதினைவர். அவர்களாகிறார் பெரிய நம்பி, திருகோட்டியூர் நம்பி, திருமாலையாண்டான், ஆளவந்தாராழ்வார், திருமலை நம்பி, ஈசாண்டான், தெய்வவாரியாண்டான், சிறியாண்டான், திருமோகூரப்பன், திருமோகூர் நின்றார், தெய்வப்பெருமாள், திருமங்கையாளியார், பிள்ளைதிருமாலிருஞ்சோலைதாஸர், மாறனேர் நம்பி, ஆள்கொண்டி.

ஆளவந்தாரின் திருவடிகளை அண்டியிருந்தவர்கள் 15 பேர் – பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமாலையாண்டான், ஆளவந்தாராழ்வார் திருமலைநம்பி, ஈசாண்டான், தெய்வவாரிஆண்டான், சிறியாண்டான், திருமோகூரப்பன், திருமோகூர் நின்றார், தெய்வப்பெருமாள், திருமங்கையாளியார், பிள்ளைத் திருமாலிருஞ்சோலைதாஸர், மாறனேர் நம்பி மற்றும் ஆள்கொண்டி ஆகியோர் ஆவர்.

பெரிய நம்பி ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தவர்கள் அறுவர். அவர்களாகிறார் எம்பெருமானார், மலைகுனிய நின்றார், ஆர்ய ஸ்ரீசடகோபதாஸர், அணியரங்கத்தமுதனார், திருவாய்குலமுடையான்பட்டர், திருக்கச்சி நம்பி.

பெரியநம்பியின் திருவடிகளை அண்டி இருந்தவர்கள் 6 பேர் – எம்பெருமானார் (உடையவர்), மலைகுனியநின்றார், ஆரிய ஸ்ரீ சடகோபதாஸர், அணியரங்கத்தமுதனார், திருவாய்க்குளமுடையான் பட்டர் மற்றும் திருக்கச்சிநம்பி ஆகியோர் ஆவர்.

எம்பெருமானார் திருகோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்திலே ரகஸ்யார்த்தங்களைச் சிக்ஷித்தார். திருமாலையாண்டான் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழி கேட்டார். ஆளவந்தாராழ்வார் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழியும் ஓதி, ஸ்தோத்ராதிகளும் அருளிச் செய்யும் நல்வார்த்தைகளும் கேட்டருளினார். திருமலை நம்பி ஸ்ரீபாதத்திலே ஸ்ரீமத்ராமாயணம் கேட்டருளினார். இவர் அருளிச் செய்த ப்ரபந்தங்கள் – ஸ்ரீபாஷ்யமும், தீபமும், ஸாரமும், வேதார்த்த ஸங்க்ரஹமும், ஸ்ரீகீதாபாஷ்யமும், சிறிய கத்யமும், பெரிய கத்யமும், ஸ்ரீவைகுண்ட கத்யமும், நித்யமும் ஆக ஒன்பது. இவர் ஸ்ரீபாதத்தில் ஆச்ரயித்த முதலிகளைத் தம் தம் ஸம்ப்ரதாயப்படிகளிலே அறிந்து கொள்வது.

திருக்கோட்டியூர் நம்பியிடம் எம்பெருமானார் ரஹஸ்ய அர்த்தங்களைக் கற்றார், திருமாலையாண்டான் திருவடிகளில் திருவாய்மொழி அர்த்தங்களைக் கற்றார், ஆளவந்தாராழ்வார் திருவடிகளில் திருவாய்மொழியும், ஸ்தோத்ரரத்னமும், அருளிச்செயலும் கற்றார், திருமலை நம்பிகளின் திருவடிகளில் ஸ்ரீமத் இராமாயணம் கேட்டருளினார். இவர் அருளிச்செய்த க்ரந்தங்கள் – ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த ஸாரம், வேதார்த்தஸங்க்ரகம் , ஸ்ரீ கீதா பாஷ்யம், சிறிய கத்யம் (ஸ்ரீ ரங்க கத்யம்), பெரிய கத்யம் (சரணாகதி கத்யம்), ஸ்ரீ வைகுண்ட கத்யம் மற்றும் நித்யம் என்பவை ஆகும். இவருடைய சீடர்களை தங்கள் தங்கள் ஸம்ப்ரதாயத்துக்கு ஏற்ப அறிந்து கொள்ள வேண்டும்.

## ஆசார்ய பக்தி அவஸ்யம்

குரும் ப்ரகாசாயேத் தீமான் மந்த்ரம் யத்னேன கோபயேத் அப்ரகாசப்ரகாசாப்யாம் க்ஷீயதே ஸம்பதாயுஷீ என்றார்கள். குருவை ஒருவன் ப்ரகாசிப்பிக்கிறதுவும் ஒருவன் ப்ரகாசிப்பியாதொழிகிறதுவும் குரு பக்தியில் தாரதம்யத்தாலேயிறே. பகவத்விஷயத்தில் போலே குருவிஷயத்திலும் பரையான பக்தியுடைவனுக்கு அபேக்ஷிதார்த்தங்கள் எல்லாம் ப்ரகாசிக்கும் என்னுமிடம் கட–ஜாபாலாதி ச்ருதிகளிலும் ஸஞ்சயாதி வ்ருத்தாந்தங்களிலும் ப்ரஸித்தம். இங்ஙனல்லாதார்க்கு இப்படி ஞானாஸம்பத்து உண்டாகாது என்னுமிடம் சிஷ்யர்களுடைய ஞானதாரதம்யத்தாலே கண்டுகொள்வது. மிகவும் குணாதிகரான சிஷ்யர்களுக்கும் கடுக அத்யாத்ம விஷயங்களை ப்ரகாசிப்பியாதார்க்கு நிஷ்ட்டை குலையாது என்னுமிடம் ரைக்வாதி வ்ருத்தாந்தங்களிலே ப்ரஸித்தம். பெற்றது குணமாக உபதேசித்தால் சிஷ்யபாபம் குரோரபி என்கையாலே ஆசார்யனுக்கு நிஷ்ட்டை குலையும்படியாமென்னுமிடம், வருவது விசாரியாதே இந்த்ரனுக்கு உபதேசித்துத் தானும் ப்ரஹ்மவித்யையை மறந்து, தன் சிஷ்யனான நாரதபகவானை இட்டு ஸர்வேச்வரன் உணர்த்துவிக்க வேண்டும்படியிருந்த சதுர்முகன் பக்கலிலே கண்டுகொள்வது. இப்படி அப்ரகாசப்ரகாசாப்யாம் என்கிற இரண்டுக்கும் க்ஷீயதே ஸம்பதாயுஷீ என்கிற பலங்களை ஔசித்யத்தாலும் ப்ரமாணப்ரஸித்தியாலும் க்ரமத்தாலே உதாகரித்தவித்தனை, இரண்டிலும் இரண்டு அன்வயித்தாலும் வாக்யத்தில் வரும் விரோதம் இல்லை. ஆகையால் ஸர்வவஸ்தையிலும் குருபக்தியின் பரீவாகமாக குருவை ப்ரகாசிப்பிக்கவும், மகாரத்னகர்ப்பமான மாணிக்கச்செப்புப்போலே இருக்கிற திருமந்த்ரத்தினுடைய சீர்மையும் தன் நிஷ்ட்டையும் குலையாமைக்காக சிலவான ப்ரயோஜனங்களைப் பற்ற சிஷ்யகுணபூதிம் இல்லாத சபலர்க்கு வெளியிடாதே மந்த்ரத்தை மிகவும் சேமிக்கவும் ப்ராப்தம். இவ்விடத்தில் குருசப்தம் பரமகுருக்களுக்கும் உபலக்ஷணம், ஸாமான்யமாகவுமாம் மந்த்ரசப்தம் மந்த்ரார்த்தம் முதலான ரகஸ்யங்களுக்கும் ப்ரதர்சனபரம். தான் இந்த ரகஸ்யங்களை அனுஸந்திக்கும்போதெல்லாம் ஆசார்ய பரம்பரையை அனுஸந்திக்கையும் விதிபலப்ராப்தம். இவ்வாசார்யர்களுடைய அனுஸந்தானம், ஸம்பாஷ்ய புண்யக்ருதோ மனஸா த்யாயேத் எனகிறபடியே ப்ரதிஷிஸம்பாஷணத்துக்கு ப்ராயச்சித்தமுமாம்.

சேஷஸம்ஹிதை (14–50) குரும் ப்ரகாசாயேத் தீமான் மந்த்ரம் யத்னேன கோபயேத் அப்ரகாசப்ரகாசாப்யாம் க்ஷீயதே ஸம்பதாயுஷீ – புத்திமான் ஒருவன் தனது ஆசார்யனைப் பற்றி பிறரிடம் புகழ்ந்த பேச வேண்டும், அவர் உபதேசித்த மந்திரங்களைப் பாதுகாக்க வேண்டும், இவ்விதம் குருவைப் புகழாமலும், மந்திரத்தைப் பாதுகாக்காமலும் இருந்தால் ஐச்வர்யமும், ஆயுளும் குறையும் – என்று கூறப்பட்டது. ஒருவன் தனது குருவை இவ்விதம் புகழ்வதும், புகழாமல் இருப்பதும், குருவிடம் அவன் கொண்டுள்ள அதிக பக்தியும் குறைந்த பக்தியுமே காரணம் ஆகும். பகவானிடத்தில் உள்ள பத்தியைப் போன்று, குருவிடத்திலும் பக்தி உள்ளவனுக்கு அனைத்து ஞானமும் ஏற்படும் என்ற கட உபநிஷத்தும் ஜாபால உபநிஷத்தும் கூறின. மற்றவர்களுக்கு இவ்விதம் ஏற்படாது. சிஷ்யர்கள் மிகவும் உயர்ந்த குணங்கள் கொண்டிருந்தாலும், அவர்களுக்கு உடனடியாக முழு தத்துவங்களையும் ஒரு குரு உபதேசிக்கவில்லை என்றாலும் அவருக்கு(குருவுக்கு) எந்த தோஷமும் ஏற்படாது. இதனை சாந்தோக்யத்தில் உள்ள ரைக்வர் பகுதிகளில் அறியலாம். ஜான ஸ்ருதி என்ற அரசன் ரைக்வமஹரிஷியிடம் பல முறை வேண்டி நின்ற பின்னரே, பல பரிக்ஷைக்குப் பின்னரே, அவனுக்கு அவர் உபதேசம் செய்தார். ஆனால் சிஷ்யனைப் பற்றி முழுவதுமாக நம்பி, அவனுக்கு உபதேசம் செய்தால், அந்த சிஷ்யனின் பாவங்கள் குருவிற்கே சென்று சேர்க்கின்றன. இதனை இந்திரனுக்கு அவன் தகுதி அறியாமல் உபதேசித்த ப்ரம்மனுக்கு ஏற்பட்ட நிலை மூலம் அறியலாம். ப்ரம்மன் தனது ப்ரம்மவித்யையை மறந்துவிட்டான். அதனை பகவான் ப்ரம்மனின் சீடரான நாரத முனிவர் மூலம் மீண்டும் உபதேசிக்கும்படி ஆயிற்று. குருவைப் புகழாமல் இருந்தாலும் தவறான முறையில் மந்திரத்தை வெளிப்படுத்தினாலும், ஒருவனுக்குச் செல்வத்திலும் ஆயுளிலும் தோஷம் ஏற்படும். இது மட்டும் அல்லாமல், குருவைப் புகழாமல் இருந்தால் செல்வத்துக்குத் தோஷம் என்றும், மந்திரத்தைப் போற்றாமல் இருந்தால் ஆயுளுக்குத் தோஷம் என்றும் கொள்ளலாம்.

ஆக ஒருவன் தனது குருவிடம் மிகவும் பத்தி பூண்டு இருக்கவேண்டும். மந்திரத்தை சீடனாக இருக்கக்கூடிய தகுதி இல்லாதவர்களுக்கு

உபதேசிக்கக்கூடாது. மேலும் இந்த மந்திர உபதேசங்களைத் த்யானிக்கும் போது குருபரம்பரையையும் த்யானிக்க வேண்டும். கௌதம தர்ம சூத்திரம்(9–18) – ஸம்பாஷ்ய புண்யக் க்ருதோ மனசா த்யாயேத் – பேசக்கூடாத மனிதர்களிடம் பேசியதற்குப் ப்ராயச்சித்தம் என்னவெனில், புண்ணியத்தைக் குறித்து த்யானிப்பதே ஆகும்.

என் உயிர் தந்து அளித்தவரைச் சரணம் புக்கி
யான் அடைவே அவர் குருக்கள் நிரை வணங்கிப்
பின் அருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால்நம்பி
நன்னெறியை அவர்க்கு உரைத்த உய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனைநாதன்
இன் அமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே.

இதன் பெருள் – என்னுடைய ஆத்ம ஸ்வரூபமாக பகவான் உள்ளான் என்று உபதேசித்து, என்னைக் காத்த, எனது குருவை சரணம் என்று அடைந்தேன். அவருடைய ஆசார்ய பரம்பரையையும் சரணம் என்று அடைந்தேன். அந்த குருபரம்பரையின் அருள் காரணமாக, ஸ்ரீ பெரும்பூதூரில் அவதரித்த உடையவர், அவருடைய குரு பெரியநம்பி, பெரியநம்பியின் குரு ஆளவந்தார், மணக்கால் நம்பி, சிறந்த வழியை மணக்கால் நம்பிக்கு உபதேசித்த உய்யக்கொண்டார்,நாதமுனிகள், நம்மாழ்வார், சேனைமுதலியார், எம்பெருமாளுக்கு அமிர்தம் போன்றுள்ள பெரிய பிராட்டியார் ஆகியோரை வணங்கி, பெரியபெருமாள் திருவடியை அடைகின்றேன்.

ஏதே மக்யம் அபோட மன்மத ஸார உன்மாதாய நாதாதய:
த்ரய்யந்த ப்ரதிநந்தநீய விவித உதந்தா: கதந்தாம் இக
ஸ்ரத்தாதவ்ய சரண்ய தம்பதி தயா திவ்யாபகா வயாபகா:
ஸ்பர்த்தா விப்லவ விப்ரலம்ப பதவே வைதேசிகா தேசிகா:

இதன் பொருள் – கடந்த ஸ்லோகத்தில் கூறப்பட்ட நாதமுனிகள் முதலான ஆசார்யர்கள் எப்படிபட்டவர்கள்? வேதாந்தங்களே புகழவேண்டிய தூய சரிதம் உடையவர்கள், நாம் சரணம் அடைய ஏதுவாக உள்ள, கல்யாண குணங்கள் நிறைந்த, திவ்ய தம்பதிகளின் கருணை என்னும் கங்கையை எங்கும் ஓடச் செய்தவர்கள், போட்டி, வஞ்சனை முதலானவற்றுக்கு எதிர்த்தட்டாக உள்ளவர்கள் ஆவர். இப்படிப்பட்ட இவர்கள் மன்மதனின் பிடியுலிருந்து என்னை விலக்கவேண்டும். பரமபதத்தை அடைந்து, நான் பெரும் இன்பங்களை இவர்கள் (ஆசார்யர்கள்) மூலமே கிட்டும்படிச் செய்யவேண்டும்.

க்ருத்யா க்ருத்பதன் அசிங்காசன ரஸிக கயக்ரீவ கேஷா ஊமின் தோஷ
க்ஷிப்த ப்ரத்யதிம்த்யப்தி: பகுகுணா பங்க்தி:
திக்ஸொத ஆபத்வ ஜய்கி த்வஜபடபவன் ஸ்பாதி நிர்த்தூத தத்தத்
ஸித்தாந்தஸ்தோம துலஸ்தவ: விகம ந வ்யக்த ஸத்வர்த்த நீகா

இதன் பொருள் – மற்ற குரு பரம்பரையைக் காட்டிலும் சிறந்த குணங்கள் கொண்ட நமது குருபரம்பரை எப்படிப்பட்டது? நம் ஆசார்யர்களின் இதய கமலத்தை மிகவும் விரும்பி ஹயக்ரீவன் வீற்றுள்ளான். இவனது கனைப்புகள் மூலமே, (ராமானுஜரின் ஸித்தாந்தங்களை) எதிர்த்து வாதம் செய்பவர்களையும், அவர்கள் கர்வத்தையும், நமது ஆசார்யர்கள் அடக்குகின்றனர். இவர்களுடைய புகழ் என்பது அனைத்து திசைகள் என்ற வெற்றித்தூண்கள் மேது கட்டப்பட்டுள்ளன. அந்தத் தூண்களில் உள்ள கொடிகள் மூலம் மற்றவர்களுடைய வாதங்கள் அனைத்தும் பருத்திக் கொத்துகள் போன்று காற்றில் தள்ளப்படுகின்றன. இதுவே வாதத்தில் வெல்வதில் சிறந்த வழியாகும்.

ஆரண நூல் வழிச்செவ்வை அழித்திடு மைதுகர்க்கு ஓர்
வாரண மாயவர் வாதக்கதலிகள் மாய்த்த பிரான்
ஏரணி கீர்த்தி இராமாநுசமுனியின்னுரை சேர்
சீரணி சிந்தையினோம் சிந்தியோமினித் தீவினையே

இதன் பொருள் – வேதாந்த விஷயத்தை விளக்கும் உயர்ந்த நூல் ப்ரஹ்மசூத்திரம் ஆகும். அது கூறும் உண்மையான மார்க்கத்தை தங்களின் தவறான வாதங்களால் பலரும் அழித்தனர். இந்நிலையில் அவர்களின் வாதங்களை, வாழை மரங்களை அழிக்கும் யானைப் போன்று, நம்முடைய ராமானுஜர் சாய்ந்தார். இப்படி பெரிய உதவிகள் செய்தவரும், இந்த உலகிற்கு ஏற்ற அலங்காரமாகத் தனது புகழை உடையவரும் ஆகிய ஸ்ரீ பாஷ்யக்காரரின் இனிமையான சொற்களிலும், அவரது சிறந்த குணத்திலும் எங்கள் மனதை வைத்தோம். இவற்றைவிட வேறு சாஸ்திரங்களையும் கர்மங்களையும் எண்ணமாட்டோம்.

நீளவந்தின்று விதிவகையால் நினைவொன்றிய நாம்
மீளவந்தின்னும் வினயுடம்பொன்றி விழுந்துழலாது
ஆளவந்தாராரெனவென்று அருள் தந்து விளங்கியசீர்
ஆளவந்தாரடியோம் படியோமினியல் வழக்கே

பொருள் – நீண்ட காலமாக சம்ஸாரம் என்றும் பிடியில் சிக்கியபடி உள்ளோம். நாம் இதற்குப் பிறகும் கர்மம் காரணமாக வெறும் மற்றொரு உடலைப் பெற்று வருத்தமடையாதபடி நம்மைக் காக்க ஆளவந்தார் அவதரித்தார். இப்படிப்பட்ட ஆளவந்தாரின் திருவடிகளில் நாம் அடிபணிந்தோம். அவர் தனது வாதங்கள் மூலம் மற்ற மதத்தவர்களை வென்று நம்மையும் காத்தார். இனி நாம் அவருடைய நூல்கள் அல்லாமல் வேறு எந்த சாஸ்திரங்களையும் படிக்கமாட்டோம்.

காளம் வலம்புரியன்ன நற்காதலடியவர்க்குத்
தாளம் வழங்கித் தமிழ் மறை இன்னிசை தந்த வள்ளல்
மூளும் தவநெறி மூட்டிய நாதமுனி கழலே
நாளும் தொழுதெழுவோம் நமக்கார் நிகர் நானிலத்தே

இதன் பொருள் – திருச்சின்னம் மற்றும் சங்கு போன்ற தூய்மையான குரல் உடைய கீழகத்தாழ்வான் மற்றும் மேலகத்தாழ்வான் ஆகிய இருவரும் நாதமுனிகளின் சீடர்கள் ஆவர். சிறந்த பக்தியுடன் தன்னை வணங்கி நின்ற இவர்கள் இருவருக்கும் தாளம் மற்றும் கீதங்களை நாதமுனிகள் உபதேசித்தார். இதன் மூலம் அவர்கள் பல்லாண்டு காலம் மறைந்திருந்த நம்மாழ்வாரின் இனிமையான திருவாய்மொழியை பாடும் விதத்தை உபதேசித்தார். பக்தி மற்றும் பரபக்தி என்னும் பாதையில் இந்த உலகத்தை இயங்கவைத்தார். இப்படிப்பட்ட நாதமுனிகளின் திருவடிகளை நாம் என்றும் பணிவோம். இதனால் நான்கு திசைகளிலும் நமக்கு ஈடானவர்கள் யார் உள்ளனர்?

குருபரம்பராஸாரவிஸ்தாரம் முற்றிற்று

**....தொடரும்**

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரெங்கநாயகி சமேத ஸ்ரீ ரெங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

முமுக்ஷுப்படி

ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யான அவதாரிகை

ஸ்ரீய:பதியாய் ஸ்ரீ வைகுண்ட நிகேதனாய், நித்ய முக்தானுபாவ்யனாய் நிரதிசயானந்த யுக்தனாயிருக்கிற ஸர்வேச்வரன், அந்த நித்யசூரிகளோபாதி தன்னை அனுபவித்து நித்ய கைங்கர்யரஸராய் வாழுகைக்கு ப்ராப்தியுண்டாயிருக்கச் செய்தேயும் அத்தை இழந்து அஸன்னேவ என்கிறபடியே அஸத்கல்பராய்க் கிடக்கிற ஸம்ஸாரிசேதனருடைய இழவை அனுஸந்தித்து, அத்யந்த வ்யாகுலசித்தனாய், இவர்கள் கரண களேபரங்களை இழந்து இறகொடிந்த பக்ஷி போலே கிடக்கிற தசையிலே கரணாதிகளைக் கொடுத்து, அவற்றைக் கொண்டு வ்யபிசரியாதே தன்னை ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கைக்கு உடலாக, அபௌருஷேயமாய் நித்ய நிர்த்தோஷமாய் ஸ்வத:ப்ரமாணமான வேதத்தையும் ததுபப்ரும்கணங்களான ஸ்ம்ருதி இதிகாச புராணாதிகளையும் ப்ரவர்த்திப்பித்தவிடத்திலும், அந்த சாஸ்த்ராப்யாஸத்துக்கு அனேக யோக்யதை வேண்டுகையாலே அவ்வழியாலே ஜ்ஞானம் பிறந்து சேதனர் உஜ்ஜீவிக்கை அரிதாயிருக்கிறபடியைத் திருவுள்ளம் பற்றி ஸகல சாஸ்த்ர தாத்பர்யங்களையும் ஸுக்ரகமாக இவர்க்கள் அறியலாம்படி பண்ணவேணுமென்று, ஸ்வரூபோபாய புருஷார்த்த யாதாத்ம்ய ப்ரதிபாதகமான ரஹஸ்யத்ரயத்தையும், ஸ்வயமேவ ஆசார்யனாய் நின்று ப்ரகாசிப்பித்தருளினான்.

பெரியபிராட்டியின் நாதனும், ஸர்வேஸ்வரனும் ஆகிய ஸ்ரீமந் நாராயணன் நித்ய சூரிகளால் சூழப்பட்டு, ஸ்ரீ வைகுண்டத்தில் எல்லையற்ற ஆனந்தத்துடன் உள்ளான். ஆயினும் சம்ஸாரத்தில் சிக்கிண்டு தவிக்கும் ஜீவன்களைக் கண்டு அவன் வருத்தம் கொள்கிறான். இந்த ஜீவன்கள் நித்ய சூரிகள் போன்று தடையற்ற கைங்கர்யத்துடன் வாழும் அதிகாரம் பெற்றவர்களே ஆவர். ஆயினும் இந்த ஜீவன்கள், தங்கள் அதிகாரத்தை இழந்து அஸத் போன்று இந்த உலகில் அஸந்நேவ – அஸத் போன்றவர்கள் (தைத்திரீய உபனிஷத் 2–6) என்றபடி வாழ்கின்றனர். அவர்கள் தங்கள் உடல் உறுப்புக்களையும் இறகுகளையும் இழந்த பறவை போன்று துன்பத்தில் உள்ளனர். இவர்களுக்குத் தன்னை அடையும்படி, அதன் மூலம் தங்களைக் காத்துக் கொள்ளும்படி, ஸர்வேச்வரன் அவர்களுக்கு உடல் உறுப்புகளை அளிக்கிறான். இவர்களைக் காப்பதற்காகவே யாராலும் இயற்றப்படாததும், தோஷம் அற்றதும், அனைத்திற்கும் ப்ரமாணங்களாக உள்ளதும் ஆகிய வேதங்களை அளித்தான். மேலும் ஸ்ம்ருதி, இதிகாசம், புராணங்கள் ஆகியவை மூலம் அந்த வேதங்களுக்கு ஏற்ற பொருளையும் நாம் உணரும்படிச் செய்தான். ஆயினும் அந்த வேத சாஸ்திரங்களைக் கற்று உணர்வதற்குப் பல தகுதிகள் வேண்டியிருந்ததால், சேதனர்களால் அவற்றை முழுவதுமாக உணர்ந்து, அதன் மூலம் மோக்ஷம் பெறுவது இயலவில்லை . இதனை அறிந்த ஸர்வேச்வரன், அனைத்து சாஸ்திரங்களையும் தத்துவங்களையும் இவர்கள் அறிந்து கொள்ளும்படிச் செய்ய வேண்டும், என்று தனது திருவுள்ளத்தில் எண்ணினான். ஆகவே அவனே ஆசார்யனாக அவதரித்து, ஜீவனின் ஸ்வருபம் (இயல்பு), மோக்ஷ வழி (உபயம்) மற்றும் ஜீவனின் புருஷார்த்தம், ஆகியவற்றை உள்ளது உள்ளபடி மூன்று ரஹஸ்யங்களில் அருளிச் செய்தான்.

அதில், திருமந்த்ரத்தை ஸ்ரீபதரிகாச்ரமத்திலே ஸ்வாம்சபூதனான நரன் விஷயமாக ப்ரகாசிப்பித்தான். த்வயத்தை ஸ்ரீவிஷ்ணுலோகத்திலே ஸ்வமஹிஷியான பிராட்டி விஷயமாக ப்ரகாசிப்பித்தான். சரமச்லோகத்தை திருத்தேர்த்தட்டிலே ஸ்வாஸ்ரீதனான அர்ஜுனன் விஷயமாக ப்ரகாசிப்பித்தான். ஆகையாலிறே லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் என்று குருபரம்பராதியிலே ஈச்வரனை அனுஸந்திக்கிறது.

இவற்றில் திருமந்திரத்தை தனது அம்சமாகவே தோன்றிய நரன் என்பவனுக்கு பத்ரிநாத்தில் அருளிச் செய்தான். த்வய மந்திரத்தை விஷ்ணு லோகத்தில் தனது

பட்டமஹிஷியான பெரியபிராட்டிக்கு அருளிச் செய்தான். சரம ச்லோகத்தைத் தன்னை அண்டி நின்ற அர்ஜுனனுக்குத் தேரில் நின்று உபதேசித்தான். இந்தக் காரணத்தினால்தான் குரு பரம்பரையில் முதலில் – லக்ஷ்மீ நாத ஸமாரம்பாம் – என்று ஸர்வேச்வரனைக் கூறுகிறோம்.

இனி இந்த ரஹஸ்யத்ரயந்தான் சப்தம் ஸுக்ரகமாயிருந்ததேயாகிலும் அர்த்தம் உபதேசகம்யமாகையாலும், அதறிந்தே எல்லார்க்கும் உஜ்ஜீவிக்க வேண்டுகையாலும், அந்த ரஹஸ்யத்ரயத்திலும் பூர்வாசார்யர்களுடைய உபதேச பரம்பரா ப்ராப்தமான அர்த்த விசேஷங்களை ஸர்வர்க்கும் ஸுக்ரகமாகவும் ஸுவ்யக்தமாகவும் பிள்ளை லோகாசார்யர் தம்முடைய பரமக்ருபையாலே இப் ப்ரபந்தமுகேந அருளிச் செய்கிறார். முன்பே ரகஸ்யத்ரய விஷயமாக மூன்று ப்ரபந்தம் இட்டருளியிருக்கச் செய்தேயும், அதில் யாத்ருச்சிகப்படி அதிஸங்க்ரகமாகையாலும், பரந்தபடி அதிவிஸ்த்ருதமாகையாலும், ஸ்ரீய:பதிப்படி உபயதோஷமுமின்றிக்கேயிருந்தேயாகிலும் ஸம்ஸ்ருத வாக்ய பகுளமாகையாலே பெண்ணுக்கும் பேதைக்கும் அதிகரிக்கப் போகாமையாலும், த்ரிவித தோஷமுமில்லாதபடி இன்னமும் ஒரு ப்ரபந்தமிட வேணுமென்று திருவுள்ளம் பற்றி எல்லாவற்றுக்கும் பின்பிறே முமுக்ஷுப்படியாகிற இப் ப்ரபந்தம் இட்டருளிற்று. ஆகையிறே, அல்லாத ப்ரபந்தங்கள் கிடக்க, இத்தை எல்லாரும் அதிகரித்துப்போருகிறது. இன்னமும் பூர்வ ப்ரபந்தங்களில் அனுக்தமான அர்த்த விஷேஷங்களும் இப் ப்ரபந்தத்திலே உண்டாகையாலும் இதுவே எல்லார்க்கும் ஆதரணீயமாயிருக்கும்.

இந்த மூன்று ரஹஸ்யங்களின் சொற்களானவை மிகவும் எளிதாகப் புரியும்படி இருந்தாலும், அந்த ரஹஸ்யங்களின் பொருளை உபதேசம் மூலமே கற்க வேண்டும். இதன் மூலமே அனைவரும் காக்கப்பட இயலும். இதனை மிகவும் கருணை வாய்ந்தவரான பிள்ளை லோகாசார்யார் உணர்ந்தார். ஆசார்ய வழியாகத் தான் கற்ற உபதேசங்களை, அனைவருக்கும் எளிதாக விளங்க வேண்டும் என்ற கருணை மேலிட, அவர் இந்த ப்ரபந்தத்தை அருளிச் செய்தார். இவர் மூன்று ரஹஸ்யங்கள் விஷயமாக மூன்று ப்ரபந்தங்களை முன்பே அருளிச்செய்தார். அவற்றில் யாத்ருச்சிகபடி என்ற ப்ரபந்தம் மிகவும் சுருக்கமானது, பரந்தபடி என்பது மிகவும் பெரியது, இரண்டுக்கும் இடைப்பட்ட ஸ்ரீய:பதிபடி என்பது முழுவதும் ஸம்ஸ்ருதமாக இருந்ததால் பெண்களுக்கும், ஞானம் இல்லாதவர்களுக்கும் ஏற்றதாக இல்லை. ஆக இந்த மூன்று விதமான தோஷங்களும் இல்லாதபடி மேலும் ஒரு ப்ரபந்தத்தை இயற்ற வேண்டும் என்று எண்ணி, இவை அனைத்திற்கும் பின்னர் முமுக்ஷுப்படி என்ற இந்த ப்ரபந்தத்தை அருளிச் செய்தார். இதனால் மற்ற ப்ரபந்தங்களைவிட இதனைப் பலரும் கற்றனர். இதனால் மற்ற ப்ரபந்தங்களை விட இதில், அவற்றில் இல்லாத பல விசேஷங்கள் கூறப்பட்டதால், இது அனைவரையும் கவர்ந்தது.

## திருமந்த்ரப்ரகரணம்

### 1. முமுக்ஷுவுக்கு அறியவேண்டும் ரஹஸ்யம் மூன்று

வ்யாக்யானம் – முமுக்ஷுவாகிறவன் மோக்ஷத்திலே இச்சையுடையவனானவன். ஏமுச்சல் மோக்ஷணேஏ யிறே தாது. இத்தால், ஸம்ஸார விமோசனத்தில் இச்சை பிறந்தவனுக்கு அன்றபடி. ஆத்மப்ராப்தி காமனுக்கும் முமுக்ஷுத்வமுண்டேயாகிலும், இவ்விடத்தில் அவன் விவக்ஷிதனன்று. அவனுக்கு ரஹஸ்ய த்ரயஜ்ஞ்ஜானாபேக்ஷை இல்லையிறே. ஆகையால், இவர் முமுக்ஷுவெங்கிறது. பகவத்ப்ராப்திகாமதயா ஸம்ஸார நிவ்ருத்தியிலே இச்சை பிறந்தவனை. ஏவம்பூதனானவனுக்கு ஏஅறிய வேண்டும் ரஹஸ்யம் மூன்றுஏ என்றது – இவனுக்கு அவச்யம் ஜ்ஞாதவ்யமாயுள்ளது ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களாகையாலும், அவற்றை இந்த ரஹஸ்த்ரயம் உள்ளபடி ப்ரதிபாதிக்கையாலும், ரஹஸ்யத்ரயமுமே அறியவேண்டுவதெங்கை. ஏஸ்வஜ்ஞ்ஜானம் ப்ராபகஜ்ஞ்ஜானம் ப்ராப்யஜ்ஞ்ஜானம் முமுக்ஷுபி: ஜ்ஞானத்ரயமுபாதேயம் ஏததன்யன்ன கிஞ்சனஏ என்னக் கடவதிறே. ரஹஸ்யம் மூன்று என்று இவர் உத்தேசிக்கிறது – திருமந்த்ரமும், த்வயமும், சரமச்லோகமுமாகிற இவற்றை என்னுமிடம், மேலே ஸுஸ்பஷ்டம். இவற்றை ரஹஸ்யங்களெங்கிறது, ஸகல வேதாந்த ஸாரார்த்த ப்ரதிபாதகதயா பரமகுஹ்யங்களாகையாலே. ஆக, இவ்வாக்யத்தால், அதிகாரி நிர்த்தேசமும் தத்ஜ்ஞாதவ்ய நிர்த்தேசமும் பண்ணியருளினாராய்த்து.

விளக்கம் – மோக்ஷத்தில் விருப்பம் உள்ளவன் முமுக்ஷு ஆவான். இதன் மூலம் சம்ஸாரத்தில் இருந்து விடுபடும் விருப்பம் கொண்டவனுக்கு என்றும் பொருள்.

தனது ஆத்மாவை உணர்வதில் மட்டுமே விருப்பம் உள்ள ஒருவன் முமுக்ஷுவாகும் தகுதி பெற்றவன் என்றாலும், இங்கு அவனைப் பற்றிக் கூறவில்லை. அப்படிப்பட்டவன் இந்த மூன்று ரஹஸ்யங்களை அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆக முமுக்ஷு என்று இவர் (பிள்ளை லோகாசார்யர்) கூறுவது, பகவானை அடைய வேண்டும் என்ற ஆசை காரணமாக சம்ஸாரத்தில் இருந்து விடுபடவேண்டும் என்ற ஆவல் கொண்டவன் ஆவான்.

இப்படிப்பட்டவன் மூன்று ரஹஸ்யங்களை அறியவேண்டும். இந்த மூன்று ரஹஸ்யங்களும் ஜீவனின் ஸ்வரூபம், உபாயம் மற்றும் புருஷார்த்தம் ஆகியவற்றைத் தெளிவாகக் கூறுவதால் இவை அறியப்பட வேண்டும். ஸ்வஞானம் ப்ராபகஞானம் ப்ராப்யஞானம் முமுக்ஷுபு: – முமுக்ஷுவானவன் தன்னைப் பற்றிய ஞானம், தான் அடைய வேண்டிய இலக்கு, அந்த இலக்கை அடையும் உபாயம் ஆகியவற்றை அறியவேண்டும் என்று கூறப்பட்டது. ரஹஸ்யம் என்று இவர் கூறுவது மூன்று – திருமந்த்ரம், த்வயம், சரமஸ்லோகம் என்பதாகும். இது மேலே விளங்கும். இவை வேதாந்தங்களின் பொருளை உள்ளது உள்ளபடி உரைப்பதாலும், பரம ரஹஸ்யம் என்பதாலும் ரஹஸ்யங்கள் எனப்பட்டன. ஆக இந்த சூத்திரம் மூலம் இந்த ப்ரபந்தத்தின் அதிகாரி (கற்பவன்) யார் என்றும், அவன் எதனை அறிய வேண்டும் என்றும் கூறப்பட்டது.

## 2. அதில் ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம்

அவதாரிகை – இனி, அந்த ரஹஸ்யத்ரயத்திலும் ப்ரதமரஹஸ்யம் ஏது என்னும் ஆகாங்க்ஷையிலே அருளிச் செய்கிறார், ஏஅதில் ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம்ஏ என்று,

வ்யாக்யானம் – அதாவது, அந்த ரஹஸ்யத்ரயத்திலும் வைத்துக்கொண்டு, இவ்வதிகாரிக்கு ப்ரதமம் ஜ்ஞாதவ்யமான ரஹஸ்யம் ஸ்வரூபயாதாத்ம்யபரமாய் த்யாஜ்யோபாதேய விபாகஜ்ஞானத்தைப் பரிபூர்ணமாகப் பிறப்பிக்குமதான திருமந்த்ரமெங்கை. அனன்யார்ஹ சேஷத்வம் அனன்ய சரணத்வம் அனன்ய போக்யத்வமாகிற ஆகாரத்ரயத்தையும் ப்ரதிபாதிக்கையாலே சேதன ஸ்வரூப யாதாத்ம்ய ப்ரதிபாதனபரமாய், ததனுகுண த்யாஜ்யோபாதேய விபாகத்தையும் ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதியா நின்றுள்ள இம்மந்த்ரத்தாலே ஸுசிக்ஷிதனானவனுக்கிறே, மற்றை ரஹஸ்யங்களிரண்டிலும் ப்ரதிபாதிக்கப்படுகிற உபாயோபேயங்களில் அபேக்ஷை ஜநிப்பது. ஆகையாலே ஸ்வரூபயாதாத்ம்யபரமான திருமந்த்ரம் ப்ரதம ரஹஸ்யமென்னக் குறையில்லை. இன்னமும், ப்ரணவத்துக்கு மந்த்ரசேஷம் விவரணமானாப்போலே மந்த்ரசேஷத்துக்கு த்வயம் விவரணமாய், த்வயத்துக்குச் சரம ச்லோகம் விவரணமாயிறே இருப்பது. அந்த ந்யாயத்தாலும் இதினுடைய ப்ராதாம்யம் ஸித்தமிறே. ஆக, இவை எல்லாவற்றையும் திருவுள்ளம் பற்றியாய்த்து – ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம் – என்று இவர் அருளிச்செய்தது. இத்தை மந்த்ரமென்கிறது, – மந்தாராம் த்ராயத இதி மந்த்ர: – என்கிறபடியே சப்த சக்தியாலும் அர்த்த போதநத்தாலும் தன்னை அநுஸந்திப்பார்க்கு ரக்ஷகமாகையாலே. சப்தசக்தியாலே ரக்ஷகமாம், ஜபஹோமாதிகளாலே கார்யங்கொள்ளும் உபாஸகர்க்கு. அர்த்த போதநத்தாலே ரக்ஷகமாம் ஈச்வரனே உபாயோபேயமென்றிருக்கும் ப்ரபந்நர்க்கு. அர்த்த போதநத்தாலே ரக்ஷகமாகையாவது, – தேஹாஸக்தாத்மபுத்திர் யதி பவதி பதம் ஸாது வித்யாத் த்ருதீயம் ஸ்வாதந்த்யாந்தோ யதி ஸ்யாத் ப்ரதமம் இதர சேஷத்வதீச்சேத் த்விதீயம், ஆத்மத்ராணோந்முகச்சேந்நம இதி ச பதம் பாந்தவாபாஸ லோலச் சப்தம் நாராயணாக்க்யம் விஷயசபலதீச்சேத சதுர்த்தீம் ப்ரபந்ந: – என்று பட்டர் அருளிச்செய்தபடியே தன்னை அநுஸந்திப்பார்க்கு தேஹாத்மாபிமாநமும், ஸ்வாதந்த்ரியமும், அந்யசேஷத்வமும், ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமும், அபந்துஸங்கமும், விஷயப்ராவண்யமும் மேலிடாதபடி பண்ணி ஸ்வரூபாநுரூபமாக நடக்கும்படி நோக்குகை.

விளக்கம் – இந்த மூன்று ரஹஸ்யங்களில் முதலாவது ரஹஸ்யம் எது என்று கேள்விக்கு விடை அளிக்கிறார். இந்த மூன்று ரஹஸ்யங்களில் – ஆத்மாவின் ஸ்வரூபத்தை விளக்க வல்லதும், எதனை ஏற்பது எதனைத் தள்ளுவது என்ற ஞானம் உண்டாக்குவதும் ஆகிய திருமந்த்ரமே அதிகாரி அறிய வேண்டிய முதல் ரஹஸ்யமாகும். இந்தத் திருமந்த்ரம், ஜீவனின் ஸ்வரூபத்தை உள்ளபடி

விளக்குகிறது – எப்படி எனில் ஜீவனின் முக்கிய தன்மைகளான – வேறு யாருக்கும் அடிமை இல்லை (அனன்யார்ஹ சேஷத்வம்), வேறு அடைக்கலம் ஏதும் இல்லை (அனன்ய சரணத்வம்), வேறு யாரையும் மகிழ்விப்பதற்காக இல்லை (அனன்ய போக்யத்வம்) – ஆகியவற்றை விளக்குகிறது. இந்த தன்மைகளுக்கு ஏற்ப, எதனை விலக்குவது எதனை ஏற்பது என்பதையும் திருமந்த்ரம் விளக்குகிறது. இந்த மந்த்ரம் மூலம் ஒருவனுக்கு மற்ற இரண்டு மந்த்ரங்கள் உபதேசிக்கும் உபாயம் (வழி) மற்றும் உபேயம் (இலக்கு) ஆகிய இரண்டின் மீது பற்றுதல் உண்டாகும். ஆகவே, ஸ்வரூபத்தை விளக்கவல்ல திருமந்த்ரத்தை முதல் ரஹஸ்யம் என்று கொள்வதில் குறைவில்லை. திருமந்த்ரமாவது ப்ரணவத்தை (ஓம்) விளக்குகிறது, த்வயமானது திருமந்த்ரத்தை விளக்குகிறது, சரம ச்லோகமானது த்வயத்தை விளக்குகிறது. இந்த வரிசையாலும் திருமந்த்ரமே முதலாவது ஆகும். இது அனைத்தையும் திருவுள்ளத்தில் கொண்டே (பிள்ளை லோகாசார்யர்) – ப்ரதம ரஹஸ்யம் திருமந்த்ரம் – என்று அருளிச் செய்தார்.

இதனை மந்த்ரம் என்று ஏன் கூறவேண்டும்? மந்த்ரம் த்ராயத இதி மந்த்ர: – தன்னைத் த்யானிப்பவனை காப்பாற்றுவதய் மந்த்ரம் என்று கூறுவர். இதன்படியே மந்த்ரம் ஆனது தனது ஒலியாலும், பொருளாலும் தன்னை உச்சரிப்பவர்களுக்கு ரக்ஷையாக உள்ளது. ஜபம் முதலான பாதைகள் மூலம் மோக்ஷம் அடைய விரும்பும் உபாஸகர்களுக்கு, ஒலியின் மூலம் ரக்ஷை அளிக்கிறது. ஈஸ்வரன் ஒருவனே தனது உபாயம் என்றும் உபேயம் என்றும் உள்ள ப்ரபன்னனுக்கு, தனது பொருள் மூலம் ரக்ஷை அளிக்கிறது. பொருள் மூலம் மந்த்ரம் எப்படி ரக்ஷை அளிக்கிறது? இதனை பராசரபட்டர் அஷ்டஸ்லோகியில் பின்வருமாறு கூறுகிறார்:

தேஹாஸக்தாத்மபுத்திர் யதி பவதி பதம்
 ஸாது வித்யாத் த்ருதீயம்
ஸ்வாதந்த்யாந்தோ யதி ஸ்யாத் ப்ரதமம்
 இதரசேஷத்வதீச்சேத் த்விதீயம்
ஆத்மத்ராணோந்முகச்சேந் நம இதி ச பதம்
 பாந்தவாபாஸலோல:
சப்தம் நாராயணாக்யம் விஷயசபலதீச்சேத்
 சதுர்த்தீம் ப்ரபன்ன:

இதன் பொருள் – தனது உடலே ஆத்மா என்று எண்ணினால், மூன்றாவது அக்ஷரத்தை(ஓம் என்பதில் உள்ள ம்) நன்றாக அறிய வேண்டும். நான் என்ற எண்ணம் கொண்டால் முதல் அஷரமான –அ– என்பதை அறிய வேண்டும். தான் வேறு யாருக்காவது அடிமை என்று எண்ணினால் –உ– என்பதை அறிய வேண்டும். தன்னைப் பாதுகாத்துக் கொள்ள விரும்பினால் –நம– என்பதை அறிய வேண்டும். தனது உறவினர்கள் என்று மட்டுமே எண்ணியிருந்தால் –நாராயணா– என்பதை அறிய வேண்டும். உலக விஷயங்களை மட்டுமே எண்ணியிருந்தால் –ஆய– என்பதை அறிய வேண்டும்.

ஆக தன்னை அநுசந்திப்பவர்களை திருமந்த்ரமாவது அவனது உண்மையான இயல்புக்கு ஏற்றபடி மாற்றிவிடும். இதன் மூலம் அவனுக்கு உடலே ஆத்மா(தேஹ–ஆத்மா அபிமானம்), தான் சுதந்திரமானவன்(ஸ்வாதந்த்ரியம்), மற்றவர்களுக்கு அடிமை(அந்ய சேஷத்வம்), தன்னை தானே காக்க எண்ணுதல்(ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம்), உலகவிஷயங்களில் நாட்டம்(விஷய ப்ராவண்யம்) ஆகியவை தோன்றாமல் செய்து விடுகிறது.

## 3. திருமந்த்ரத்தினுடைய சீர்மைக்குப் போரும்படி ப்ரேமத்தோடே பேணி அநுஸந்த்திகவேணும்

அவதாரிகை – இனிமேல் இம்மந்த்ரத்தினுடைய வைபவத்தை விஸ்தரேண ப்ரதிபாதிப்பதாகத் திருவுள்ளம் பற்றி, ப்ரதமம் இதினுடைய அநுஸந்தாந க்ரமகதநமுகத்தாலே இதின் வைபவத்தை அருளிச் செய்கிறார், – திருமந்த்ரத்தினுடைய– என்று தொடங்கி

வ்யாக்யானம் – திருமந்த்ரத்துக்குச் சீர்மையாவது, ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவ ஆதர்வணாநிச ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்தம் என்கிறபடியே ஜ்ஞாதவ்ய ஸகலார்த்த ப்ரதிபாதகமாய், மந்த்ராணாம் பரமோ மந்த்ரோ குஹ்யாநாம்

குஹ்யமுத்தமம், பவித்ரம் ச பவித்ராணாம் மூலமந்த்ரஸ்ஸநாதந: என்கிறபடியே மந்த்ரங்களில் வைத்துக்கொண்டு பரமமான மந்த்ரமாய், குஹ்யங்களில் வைத்துக்கொண்டு உத்தமமான குஹ்யமாய், பவித்ரங்களுக்கும் பவித்ரமாயிருக்கிற கௌரவம். (சீர்மைக்குப் போரும்படி) என்றது, தகும்படியென்கை. (ப்ரேமத்தோடே பேணி அநுஸந்த்திகை)யாவது, இத்தை அநுஸந்திக்குமளவில் சுஷ்கஹ்ருதயனாயிருந்தநுஸந்திக்கையன்றிக்கே. இதின் வைலக்ஷண்ய ஜ்ஞாநமடியாக இதின் பக்கல் தனக்குண்டான ப்ரேமத்தோடே, குஹ்யாநாம் குஹ்யமானவிது அசலறியாதபடி, மந்த்ரம் யத்நேந கோபயேத் என்கிறபடியே பேணிக்கொண்டநுஸந்திக்கை. இப்படி அநுஸந்திக்கவேணுமென்கையாலே ப்ரகாராந்தரேண அநுஸந்திக்கலாகாதென்கிற நியமம் தோற்றுகிறது.

இதன் பின்னர் இந்த மந்த்ரத்தின் மேன்மையை விரிவாக விளக்கத் திருவுள்ளம் பற்றினார். இதன் ஒரு படியாக, முதலில் இதனை அனுசந்திப்பதன் மூலம் விளக்கத் தொடங்குகிறார் – திருமந்த்ரத்தின் மேன்மைகள் பின்வருமாறு கூறப்படலாம்:

* வ்ருத்த ஹாரித ஸ்ம்ருதி(6–48) – ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவ ஆதர்வணாநிச ஸர்வம் அஷ்டாக்ஷரம் – திருமந்த்ரம் என்ற அஷ்டாக்ஷரம் ருக், யஜுர், ஸாமம் மற்றும் அதர்வணம் ஆகியவற்றை உள்ளடக்கியது

* பெரிய திருமொழி(8–10–3) – மற்ற எல்லாம் பேசிலும் – மற்ற எதனைப் பற்றியும் பேசாமல் விடுத்து உனது எட்டு எழுத்தை அறிந்து கொண்டேன்

நாரதீய கல்பம் – மந்த்ராநாம் பரமோ மந்த்ரோ குஹ்யாநாம் குஹ்யமுத்தமம், பவித்ரம் ச பவித்ராணாம் மூலமந்த்ரஸ் சனதந: – மூல மந்த்ரமானது மந்த்ரங்கள் அனைத்திலும் உயர்ந்தது. ரஹஸ்யங்கள் அனைத்திலும் ரஹஸ்யமானது. தூய்மையான அனைத்திலும் தூய்மையானது

இந்த வரிகளின் மூலம் மற்ற மந்த்ரங்களைக் காணும் போது இது உயர்ந்ததாகவும், அனைத்தையும் விட ரஹஸ்யமானதும் ஆக உள்ளது. சீர்மைக்கு போரும் என்று கூறுவது இதன் பொருமையை அறிந்து ஆகும். ப்ரேமத்தோடே பேணி அநுஸந்திக்கை என்பது வெறும் இதயத்துடன் இதனை அனுசந்திக்காமல், அந்த மந்த்ரத்தின் மீது முழு ப்ரேமையுடன் அனுசந்திக்கவேண்டும் என்பதாகும். தகுதி அற்றவர்களால் இது அறியக் கூடாத ரஹஸ்யமாக உள்ளதால், இதனை ஒருவன் மிகவும் மதித்து அனுபவிக்க வேண்டும். இந்த மந்த்ரத்தை(சேஷஸம்ஹிதை) – மந்த்ரம் யத்நேந கோபயேத் – மந்த்ரத்தை ஒருவன் காப்பாற்ற வேண்டும் என்று கூறப்பட்டது. இந்த முறை தவிர வேறு எந்த முறையிலும் அனுசந்திக்ககூடாது என்ற விதி புலப்படுகிறது.

**….தொடரும்**

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரெங்கநாயகி சமேத ஸ்ரீ ரெங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த

# சிறிய திருமடல்

தனியன்

முள்ளிச் செழிமலரோர் தாரான் முளைமதியம்
கொள்ளிக் கென்னுள்ளம் கொதியாமே – வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியை வெட்டி
மருவாளன் தந்தான் மடல்

## பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த தனியன் வ்யாக்யானம்

அவதாரிகை

(முள்ளிச் செழுமலரோர்) – ஸப்தாதி விஷயங்களின் ஸந்நிதியிலே மநஸ்ஸு பரிதபியாமல், பகவத் ப்ராவண்யத்துக்கு அநுகுணமாகத் திருமடல் என்கிற திவ்யப்ரபந்தத்தை உபகரித்தருளுவதே என்று ஆழ்வார் திருவடிகளில் ப்ரேமமுடையாருடைய ஈடுபாடாயிருக்கிறது. அன்றிக்கே, ஸ்வவிச்லேஷத்தில் ஸாம்ஸாரிக விஷயங்களிலே மநஸ்ஸு பரிதபியாதபடி ஸ்வப்ரஸாதத்தை ப்ரஸாதியாமல் தாம் மடலெடுக்க உபக்ரமித்த பாசுரமான மடலையே தந்துவிட்டாரென்றாகவுமாம்.

உலக விஷயங்களில் மனம் ஈடுபடாமல், பகவத் விஷயத்தில் ஈடுபடுவதற்கு ஏற்ற ஊக்கத்தை அளிப்பது திருமடல் என்ற திவ்யப்ரபந்தத்தை அனுஸந்திப்பதே ஆகும். இவ்விதமாக ஆழ்வாரின் திருவடிகளில் ப்ரேமை கொண்டவர்களின் ஈடுபாட்டை இந்தத் தனியன் வெளிபடுத்துகிறது. அல்லது ஆழ்வாரைப் பிரிய நேரிட்டவர்கள் சம்சார விஷயங்களில் ஈடுபடாமல் இருக்க, தான்(ஆழ்வார்) சூடிக்களைந்த செழுமலரைக் கொடுக்காமல், தான் பகவானிடம் மடல் எடுத்த ப்ரபந்தத்தை அளித்தார் என்று கூறலாம்.

வ்யாக்யானம்

(முள்ளிச் செழுமலரோர் தாரான்) நமக்கு அஸாதாரணமாய், அத்விதீயமாயிருக்கிற முள்ளிப்பூவைத் தாராகவுடையவரென்னுதல், வகுளத்தாரான் என்னுமா போலே. அன்றிக்கே, மலரோ என்று பாடமானபோது நம் அபேக்ஷிதமான முள்ளிச் செழுமலர் மாலையையோ தருகிறிலர் என்றாகவுமாம். மலரென்றது – மாலைக்கு உபலக்ஷணம். எதுக்காகத் தார் தரவேணுமென்னில், (முளைமதியம் கொள்ளிக்கென்னுள்ளம் கொதியாமே) முளைத்தெழுந்த திங்கள் விரஹிகளாயிருப்பார்க்குத் தாபஹேதுவிறே. போந்த வெண்டிங்கள் கதிர் சுட மெலியும் என்றாரிறே இவரும். நாட்டார்க்கும் அப்படியே சந்த்ரச்சண்டகராயதே என்று சந்த்ரமண்டலம் சண்டமண்டலமாயிருக்கை. தாங்யேவாரமணீயாநி முளைமதி அங்கொள்ளி என்னுதல், முளைமதியமாகிற கொள்ளியென்னுதல். அங்கொள்ளி – அழகிய கொள்ளியென்னுதல். இது பஞ்ச விஷயத்துக்கு உபலக்ஷணம். மல்லிகை கமழ்தென்றலீருமாலோ வண் குறிஞ்சி இசை தருமாலோ என்றும், வாடை தண் வாடை வெவ்வாடையாலோ, மெவுதண் மதியம் வெம்மதியமாலோ, மென் மலர்ப்பள்ளி வெம்பள்ளியாலோ என்றுமிறே விச்லேஷத்தில் விஷயங்களின் பாதகத்வாகாரங்களிருப்பது. அதுதான் விஷயாநுகுணமாயிறே இருப்பது. ஆகையால், குளிர்ந்த சந்த்ரனைக் கொள்ளிபோலே கண்டு என் ஹ்ருதயம் பரிதபியாதே, ஆழ்வார் பண்ணின உபகாரமே. (வள்ளல் திருவாளன் சீர்க்கலியன்) வள்ளல் – பரமோதாரர், திருவாளன் – பகவத் ப்ரத்யாஸத்தியாகிற ஐச்வர்யத்தையுடையவர் (வள்ளல் திருவாளன்) இவன் ஔதார்யம் பண்ணுகைக்குக்கு உடலான ஐச்வர்யம். (சீர்க்கலியன்) பகவத் பக்த்யாதி குணங்களை உடையவர்.

(கார்க்கலியை வெட்டி) கலிகன்றியாகையாலே அஜ்ஞானாவஹமான கலியை கடிந்து. கலிதோஷமிறே காம பரவஸராகிறது. அப்படி அப்ராப்த விஷயத்தில் காமம் வாராதபடி. (மருவாளன் தந்தான் மடல்) திருக்கையிலே மருவியிருக்கிற வாளையுடையவர், பகவத் காமத்துக்கு அநுகுணமான திருமடலென்கிற திவ்ய ப்ரபந்தத்தை உபகரித்தருளினார். (மருவாளன்) பகவதநுபவத்திலுண்டான போக்யதை வடிவில் தொடைகொள்ளலாம்படியானவர். இவள் அந்தண்டுழாய் கமழ்தல். மரு – பரிமளம். மருவு – மருவுதலாய், எம்பெருமானைக் கிட்டுகையை ஸ்வபாவமாக உடையவரென்றுமாம். அன்றிக்கே சேதநரைக் கிட்டி ஆளுகிறவரென்றுமாம். ஆகையால் சேதநரைத் தம்படியாக்கவேண்டி மடலை உபகரித்தருளினார். மாலையைத் தாராதே மடலைத் தந்து விட்டார் என்றாகவுமாம்.

முள்ளிச் செழுமலரோர் தாரான் – தனக்கு என்று ஏற்பட்டதாகவும், ஒப்பற்றதாகவும் உள்ள முள்ளி மலரை மாலையாகச் சூடிக் கொண்ட திருமங்கை ஆழ்வார் என்று பொருள். நம்மாழ்வாரை வகுளத்தாரானை என்று கூறுவது போன்று ஆகும். மலரோ என்று படித்தால் – நமக்கு இனிதான அவரது முள்ளி மலர் மாலையைத் தராமல், அவருக்கு விருப்பமான மடலையே அளித்துவிட்டார் என்று பொருள். எதற்காக இந்த மடல் என்றால்:

முலை … கொதியாமே – முளைத்து எழும் சந்திரன் பிரிவுற்றவர்களுக்கு வேதனை அளிப்பதாகும். இந்த ஆழ்வாரே ஏபோந்த வெண் திங்கள் கதிர் சுட மெலியும் (பெரிய திருமொழி 2–7–3 ) எம்பெருமானின் விரஹத்தில் உள்ளபோது சந்திரனும் சூரியனாகவே பட்டது என்று கூறினார் அல்லவா? இந்த உலகில் உள்ளவர்களுக்கும் இவ்விதமே – சந்த்ர: சண்ட கராயதே – சந்த்ர மண்டலம் என்பது சூரிய மண்டலம் போன்று இருக்கும். இதனையே இராமனும் – தாங்யேவாரமணீயானி – சீதை பிரிந்தபோது அனைத்தும் அழகற்றவை ஆனது என்றான் அல்லவா? முலை மதி அம் கொல்லி என்றால் – அழகான சந்திரன் என்ற நெருப்பு – என்பதாகும். சந்திரன் என்று கூறுவது பிரிந்தவர்களை வாட்டும் சந்திரன்,மல்லிகை, குறிஞ்சி, தென்றல் காற்று மற்றும் மலர்ப்படுக்கை ஆகியவற்றையும் குறிக்கும். நம்மாழ்வார் – மல்லிகை கமழ் தென்றல் ஈறுமாலோ வண் குறிஞ்சி இசை தவருமாலோ என்றும், வாடை தண் வாடைவெவ்வாடையாலோ மேவு தன் மதியும் வெம்மதியமாலோ மென்மலர் பள்ளி வெம்பள்ளியாலோ என்றும் – பிரிந்தவர்களை வாட்டும் விஷயங்கள் பற்றிக் கூறினார். ஆகவே குளிர்ந்த சந்திரனையும் நெருப்பு என்று என் மனம் மயங்காதபடி ஆழ்வாரின் உதவி இருந்தது.

வள்ளல் திருவாளன் சீர்க்கலியன் – பகவான் உதவி செய்யாத போதும் உதவுபவர், கைங்கர்யம் என்ற செல்வம் உடையவர். அளிக்கும் குணங்கள் உடையவர்.

கார் கலியை வெட்டி – அஜ்ஞானம் என்ற கலியை அறுத்தவர். கலிகாலமாக உள்ளதால் அல்லவா மற்ற விஷயங்களில் விருப்பம் ஏற்படுகிறது? அந்தக் காமம் ஏற்படாதபடி வெட்டியவர்.

மருவாளன் தந்தான் மடல் – திருக்கையில் பொருந்தியுள்ள வாள் கொண்டவர். பகவான் மீது ஏற்படும் காமத்தினால் திருமடல் என்ற ப்ரபந்தத்தை அருளியவர். எம்பெருமானை அண்டுவதையே தனது ஸ்வபாவமாக உள்ளார். நம் போன்ற சேதனர்களின் அருகில் வந்து நம்மை ஆள்கின்றவர். நம்மை தன் போன்று ஆக்குவதற்காக தான் அணிந்துள்ள மாலையைத் தராமல், மடலை அளித்து விட்டார்.

## பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த சிறிய திருமடல் வ்யாக்யானம்

## ப்ரவேசம்

கீழ் அனுபவித்தது ஜ்ஞாநாநுபவமாகையாலே பாஹ்யஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து, அது கிடையாமையாலே திருக்குடந்தையிலே சரணம்புக்கார் திருவெழுகூற்றிருக்கையிலே, இப்படி சரணம் புக்கவளவிலும் நினைவு பூரியாமையாலே, இதுக்கு ஹேதுவென் என்னில், எம்பெருமான் தான் அஜ்ஞன் அசக்தன் அப்ராப்தனாய்த் தாழ்க்கிறதன்று, இத்தலையில் கர்த்தவ்யசேஷம் உண்டாய்த் தாழ்க்கிறதுமன்று. இனி விலம்பஹேது இரண்டு தலைக்குமின்றிக்கேயிருக்கச் செய்தே, இனித் தாழ்க்கிறது கூடல் செய்ய

நினையாமையாலே, ஆனபின்பு இத்தலையை அழித்தாகிலும், முகங்காட்டுவித்துக்கொள்ளுவோம் என்கிற த்வரையின் மிகுதியை, க்ருஷ்ணாவதாரத்தில் குடக்கூத்திலே அகப்பட்டு, அவனைக் கிடையாமையாலே மடலெடுக்கத் துணிந்தாளொரு பிராட்டியுடைய பாசுரத்தாலே ஸ்வதசையை ஆவிஷ்கரிக்கிறார்.

திருகுறுந்தாண்டகத்தில் பகவானை ஞான அனுபவமாக அனுபவித்தார். அடுத்து இந்த்ரியங்கள் மூலம் அவனைக் கட்டித் தழுவ வேண்டும் என்று விருப்பம் கொண்டார். திருவெழுகூற்றிருக்கை மூலம், திருக்குடந்தை எம்பெருமானிடம் சரணம் புகுந்த பின்னரும் தனது எண்ணம் கைகூடாமைக்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தார். எம்பெருமான் இவரது பரிதாப நிலையை அறியாமலோ, இவர் அழைத்தவுடன் வரும் சக்தி இல்லாமலோ, காலம் தாழ்த்துபவனாகவோ உள்ளவன் அல்லன். அவனிடம் சரணம் அடைந்த ஆழ்வார், வேறு ஏதும் செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் உள்ளபோதிலும், அவன் இவரிடம் வரவில்லை. ஆக அவன் வராமல் இருப்பதற்கான காரணம் இருவர் பக்கத்திலும் இல்லை, என்றாலும் அவன் வரவில்லை. ஆழ்வார் தனது மனதில், அவன் நம்மிடம் சேராமல் இருப்பதற்குக் காரணம் அவனுக்கு நம் நினைவு இல்லாமல் இருப்பதே. நாம் எப்படியாவது அவனை வரவழைப்போம், என்று எண்ணினார். கண்ணன் குடக்கூத்து ஆடிய போது அவனை அணைக்க இயலாமல் நின்ற ஒரு பெண் மடலெடுப்பது போன்று, இங்கு ஆழ்வார் அருளிச் செய்கிறார்.

மடலாவது ஏதுல்யசீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜந லக்ஷணாம்ஏ என்கிறபடியே இருவரும், ஒத்த பருவத்தராய், பும்ஸ்வத்துக்கு ஏகாந்தமான அறிவு, நிறைவு, ஓர்ப்பு, கடைப்பிடி என்கிற குணங்களாலே அவனும் பூர்ணனாய், ஸ்த்ரீத்வத்துக்கு ஏகாந்தமான நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்கிற குணங்களாலே இவளும் பூர்ணையாய், இப்படி இருவரும் குறைவற்றவர்களாயிருக்க, தோழிமாரும் தானுமாக உத்யாநத்திலே பூக்கொய்யவென்று புறப்பட, அவனும் வேட்டைக்கென்று புறப்பட்டுச் சோலையிலே புகுர, தைவயோகத்தாலே கூடினதாகையாலே உயிர்த்தோழியுங்கூட அங்யபரையானவளவிலே, யாத்ருச்சிகமாக இருவருக்கும் த்ருஷ்டி பந்தம் பிறந்து, அதுவே அடியாக ஸம்ச்லேஷம் ப்ரவ்ருத்தமாக, ஏஉந்மஸ்தகரஸமாகக் கலந்து கலவியாகையாலே, நற்கேட்டிலே இரண்டு தலைக்கும் அழிவு வரும்ஏ என்று இத்தை முடிய நடத்தக் கடவதாகப் பார்த்த தைவந்தானே பிரிக்க, இருவருடைய பந்துக்களும் புனையிழைகளணிவுமாடையுடையும் புதுக்கணிப்பும் நினையும் நீர்மையதன்று என்னும்படி இருவர் வடிவிலேயும் வேறுபாடுகண்டு இருவரையும் காவல் செய்ய, அதுவே அடியாக இவர்களாற்றாமை சதசாகமாகப் பணைக்க எதிர்த்தலையைக் கிடையாமையாலே மற்றைத்தலை செய்யும் ஸாஹஸ ப்ரவ்ருத்தியாயிற்று மடலாவது.

மடல் என்பது என்ன? துல்ய சீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜந லக்ஷணாம் – ஒத்த குணம், ஒத்த வயது, ஒழுக்கம் ஆகியவற்றை உடைய சீதைக்கு இராமனே ஏற்றவன் – என்றபடி நாயகனும்,நாயகியும் ஒரே பருவம் (வயது) உடையவர்களாகவும், சரியான அறிவு, உறுதி போன்ற குணங்களுடன் நாயகன் உள்ளவனாகவும், பெண்களுக்கே உரிய நாணம், மரியாதை, பயம், பிரிந்தால் தாங்காமை போன்ற குணங்களுடன் நாயகி உள்ளவளாகவும் இருக்க வேண்டும். இவ்விதம் அவர்கள் குறைவு ஏதும் இல்லாதவர்களாக இருக்கும்போது, நாயகி தனது தோழிகளுடன் நந்தவனத்திற்கு மலர் பறிப்பதற்காகக் கிளம்புகிறாள். இதனை அறிந்த நாயகன் வேட்டைக்குச் செல்வதாகக் கிளம்பி, அதே நந்தவனத்தில் புகுந்து விடுகிறான். தோழிகள் வேறு செயலில் ஈடுபட்டு இருக்கும்போது, இவர்கள் இருவரும் விதியின் காரணத்தால் ஒருவரை ஒருவர் கண் நோக்கி நிற்கின்றனர். இதனால் இருவருக்கும் மனதளவில் சேர்க்கை உண்டாகிறது. இதனை கண்ட தெய்வமானது, அதிகம் பெய்யும் மழையால் பயிர்கள் அழிவது போன்று, இந்தச் சேர்க்கை, மூலம் இவர்கள் அழிந்து விடுவர் என்று பரிதாபப்பட்டு பிரித்து விடுகிறது. இவர்களுடைய உறவினர்கள், இவர்களது நடவடிக்கையிலும் தோற்றத்திலும் வேறுபாடு உள்ளது கண்டு, இருவரையும் காவலில் வைக்கின்றனர். இதனால் இவர்களின் பிரிவாற்றாமை (பிரிவினால் ஏற்படும் துன்பம்) அதிகமாக, ஒருவரை மற்றொருவர் சந்திக்க எடுக்கும் சாகச முயற்சியே மடல் என்பதாகும் (இந்த சாகசங்கள் – உண்ணாமல் இருப்பது, உடை சரியாக உடுத்தாமல் இருப்பது போன்றவையாகும்).

இவர்கள் மடலெடுக்கிறதுக்கு ப்ரயோஜநம் என்னென்னில்: இவ்வுபக்ரமத்தைக்கண்டு இருவருடைய பந்துக்களும் கூட்டுதல், அன்றியே, ராஜாக்கள் கூட்டுதல், அன்றியே, இருவர் பந்துக்களும் இருவரையுங்கைவிட, அலக்குப்போர்ப்போலே ஒருவர்க்கொருவர் தஞ்சமாய்க் கூடிப்போதல், அன்றிக்கே, மடலெடுத்து எதிர்த்தலையைப் பெறாமையாலே இத்தலை முடிந்தது என்னும் ஏற்றத்தைப் பெற்றுப்போதல், இவை ப்ரயோஜநமாக.

இத்தகைய மடல் எடுப்பதால் என்ன பயன்? இந்தச் செய்கை கண்டு இவர்களது உறவினர்கள், இவர்களைச் சேர்த்து வைக்கக் கூடும். அல்லது, ஏமடல் எடுத்தும் பெற இயலாத மற்றவரை நினைத்து மடல் எடுத்தவர் அழிந்தார்ஏ, என்ற பெருமை ஏற்படக்கூடும்.

வளவேழுலகில் தங்கள் அயோக்யதையை அநுஸந்தித்து அகலும் ஸ்வபாவரான இவர்கள் இஸ்ஸாகஸ ப்ரவ்ருத்தியில் இறங்குவானென்னென்னில், மடலெடுத்து அத்தலையை அழிக்கப் புகுகிறார்களல்லர்களே, ஊர்வன் மடல் என்று – சாபமாநய ஸௌமித்ரே என்று வில்லைக்காட்டி வேலையை அச்சமுறுத்தினாற்போலே, அச்சமுறுத்தி முகங்காட்டுவித்துக் கொள்ளுகிறவர்களாகையாலே, தங்கள் துணிவைச் சொல்லவே அவன் வருமென்று சொல்லுகிறார்களத்தனையல்லது மடலெடுக்கிறார்களன்றிறே. அயோக்யரென்று அகன்றதும், விலக்ஷண வஸ்துவென்று அநுஸந்தித்திறே, குணாதிக்யமும் வைலக்ஷண்யமும் அநுஸந்தித்தபடியாலேயிறே இவர்கள் ஆற்றமாட்டாதே வழியல்லாவழி போயாகிலும் பெற வேணும் என்று மேல்விழுகிறது.

இவர்கள் மடல் எடுத்து எதிர் தலையை (எதிர் தலை என்றால் நாயகனுக்கு நாயகி எதிர் தலை, நாயகிக்கு நாயகன் எதிர் தலை) அழிக்க முற்படுபவர்கள் அல்லர். ஆயினும் ஏன் மடல் எடுக்கிறார்கள்? மடல் எடுத்து விடுவேன் என்று ஏன் அச்சுறுத்துகிறார்? இதன் காரணம் என்ன? இராமன் – சாபமாநய ஸௌமித்ரே – லக்ஷ்மணா, இந்த சமுத்திரத்தை வற்றச் செய்கிறேன் – என்று வில்லையும் அம்பையும் காட்டி, கடலை பயம் கொள்ளச் செய்தது போன்று, இவர்கள் அவனுக்குப் பயம் ஏற்படுத்தி, தங்கள் முன் அவனை நிற்க வைக்க எண்ணுகின்றனர். தாங்கள் அவனைப் பெற வேண்டும் என்பதில் உறுதியுடன் உள்ளதை உணர்த்தினர். அவன் ஓடி வந்து விடுவான் என்று எண்ணுகின்றனரே அல்லாது வேறு காரணம் அல்ல. தாங்கள் தாழ்ந்தவர்கள் என்று அவனை விட்டு விலகி நின்றது, அவனுடைய சிறப்பைக் கருதி அல்லவோ? (இப்படி உள்ளபோது மடலெடுத்து அவனை அழிப்பார்களா) அவனது குணத்தையும் உயர்வையும் உணர்ந்த காரணத்தினால், அதனைப் பெற வழி இல்லாமல் தகாத வழிகளான நோன்பு எடுத்தல் (ஆண்டாள்), மடல் எடுப்பது போன்றவற்றைச் செய்கின்றனர்.

இவர்களுக்குமொரு ஸ்வபாவமுண்டு, – தங்களை அநுஸந்தித்தபோது அயோக்யரென்று அகலுவார்கள். அவனை அநுஸந்தித்தபோது தங்களையும் பாராதே மேல்விழுவர்கள், அத்தலையை அநுஸந்திக்கச்செய்தே இத்தலை தோன்றாதிறே, அத்தாலே மேல் விழுகிறார்கள்.

இவர்களது மற்றொரு ஸ்வபாவம் – தங்களது தாழ்வை எண்ணி அவன் அருகில் நாம் செல்லக்கூடாது என்று இருப்பவர்கள் ஆவர். அவனை எண்ணியபடியே உள்ளபோது, தங்களது தாழ்வை மறந்து விட்டு, அவனை அனுபவிக்க எண்ணுவார்கள்.

ஆனால் அவர்கள் பிராட்டிமார் பேச்சைப் பேசவானென்னென்னில், ஆத்ம ஸ்வரூப வைலக்ஷண்யத்தாலும்,அநங்யார்ஹ சேஷத்வாதிகளாலும், அந்வயத்தில் தரிக்கையாலும், வ்யதிரேகத்தில் தரியாமையாலும், ஜ்ஞானம் விசதமானால் இவ்வாத்ம வஸ்துவும் பிராட்டிமாரோடொக்குமாகையாலும், இவர்கள் மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர்களாகையாலே பிராட்டி பேச்சாலே பேசுகிறார்கள்.

ஆனால், அவர்கள் தங்களாகவே பேசுவது போன்று பேசாமல், பிராட்டிமார்கள் போன்று பேசுவது ஏன்? காரணம் – ஆத்மாவின் ஸ்வரூபம் பெண்களின் குணங்களை ஒத்து விளங்குகிறது. எப்படி என்றால் – பதி விரதைக்கு உரிய தன்மைகளான மற்றவர்களுக்கு அடிமையாகாமல் இருத்தல், வேறு கதி என்று எதனையும்

சாராமல் இருத்தல், வேறு யாருடைய இன்பத்திற்காகவும் இல்லாமல் இருத்தல் (இதுபோன்று ஆத்மா எம்பெருமானை குறித்து இருத்தல் வேண்டும்), கணவனைப் பிரிந்தால் துன்பத்திலும், கூடினால் இன்பத்திலும் உள்ள தன்மை (ஆத்மா எம்பெருமானைப் பிரிய நேரிட்டாலும் கூடினாலும் இதே நிலை), முக்தி அடையும்போது ஏற்படும் ஞானம் என்பது பிராட்டிமார்களோடு ஒத்திருப்பதால், ஆழ்வார்கள் பிராட்டி மார்கள் பேசுவது போன்றே அருளிச் செய்கின்றனர்.

கடலன்ன கர்மத்தராகிலும் மாதர் மடலூரார் மற்றையார் மேல் என்று ஸ்த்ரீக்கள் புருஷர்கள்மேல் மடலூரக்கடவதல்லவென்று லக்ஷணங்காட்டிக்கிடக்கச் செய்தே, இப்பிராட்டி மடலூருவானென்னென்னில், ஆசை ஓர் தலைக்கேயாய், ஒருதலை லக்ஷணப்படியே ஆசையை மர்யாதையிலே நடத்தலாமாகில் அது செய்யலாவது, ஆசைமிக்கார் மடலூருமத்தனை என்னும் ஆர்ய மர்யாதையாலே மடலூர உபக்ரமிக்கிறார்கள்.

கடலன்ன காமத்தராகிலும் மாதர் மடல் ஊரார் மற்றையார் மேல் – என்று பெண்கள், ஆண்கள் மீது மடல் ஊர்வது தகாது என்று கூறியுள்ளபோது, ஆழ்வார்கள் தங்களைப் பிராட்டிமார்களாக நினைத்து, எம்பெருமானான புருஷன் மீது மடல் ஊர்வது தகுமா?

பின்னைத் தமிழர் செய்ததுக்கு ஹ்ருதயமென்னென்னில், ராஜாஜ்ஞையிலே ஆசையை வரம்புகட்டப் பார்த்ததுக்கு ஹ்ருதயமேது என்று அறிந்ததில்லை.

ஆசை என்பது ஒருவருக்கு மட்டுமே என்றால் இது போன்று விதி முறைகள் கூறலாம். ஆனால் ஆசை என்பது ஆண்–பெண் என்ற வேறுபாடு இன்று ஏற்படுகிறது. எனவே ஆசையுள்ளவர்கள் மடல் ஊரலாம் என்று வடமொழி கூறுவதற்கு ஏற்ப இங்கு மடல் எடுக்கப்பட்டது. அரசனின் ஆணை மூலம் ஆசையைக் கட்டுப்படுத்தலாம் என்பது போல, ஆண்–பெண் இலக்கணத்துக்கு உட்பட்டு கட்டுப்படுத்துதல் என்பதை எங்கும் காண இயலாது.

மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர்கள் அறிவுடையாராகில் அனுஷ்டிக்கக்கடவதல்ல என்று அவர் நிஷேதித்த காமத்தை அநுஷ்டிக்கிறார்களோவென்னில், அப்படி நிஷேதித்த காமமல்ல. நிதித்யாஸிதவ்ய: என்று வேதாந்தத்திலே விதிக்கிற பகவத் பக்தியை காமமென்கிறது, ஆகையாலே விஹிதமான வ்ருத்தி(பக்தி)யைக் காமமென்கிறது. மடலெடுக்கையாவது தன்னுடைய ஸ்த்ரீத்வத்துக்கும் அவனுடைய புருஷோத்தமத்வத்துக்கும் சேருவதொன்றன்று, அவன் தானே வரக் காண்கைகாண் ஸ்த்ரீத்வமாவது என்று விலக்குகிறவர்களைக் குறித்து, மநோஹாரி சேஷ்டிதங்களிலே அகப்பட்டு அபஹ்ருத சிந்தையானேன், அவன் தானே வருகிறான், அவனுக்கு நிறக்கேடு விளைக்கவொண்ணாது என்கிற இதுவும் செய்தற்றது. இனி மடலெடுத்து அவனைப் பெற்றல்லது தரியேன் என்கிற தன் துணிவை, (விலக்குகிற பந்துக்களுக்குச்) சொல்லுகிறாள். மடலெடுக்கப்புக்கவள் விளம்பிக்கிறதுக்கு ஹேதுவென்னென்னில், ஹேதுக்களாலே பந்துக்களை இசைவிக்கைக்காகவும், குணாதிக வஸ்துவைக் கடுக அழிக்கலாகாதென்றும், வருகைக்கு அவகாச ப்ரதாநம் பண்ணுகைக்காகவும் விளம்பிக்கிறாள்.

ஆழ்வார்களோ, மயர்வற மதி நலம் அருளப்பெற்றவர்கள் – என்று கூறப்படும்போது, அறிவுள்ள அவர்களால், காமம் என்பது கடைபிடிக்கப்படாது என்றே அனைவரும் எண்ணுகின்றனர். இப்படி உள்ள போது, ஆழ்வார்களே அறிவுள்ளவர்கள் தடை செய்யும் காமத்தைப் பற்றிக் கூறுகின்றனரே என்ற கேள்வி எழலாம். இவர்களின் ப்ரபந்தங்களில் சாஸ்திரங்கள் மூலம் தடைசெய்யப்பட்ட காமம் இருப்பதில்லை. நிதித்யா ஸிதவ்ய: – த்யானிக்கதக்கவன் என்று வேதாந்தத்தில் கூறப்பட்ட பகவத் பக்தியே, இவர்களது ப்ரபந்தங்களில் காமம் எனப்பட்டது. எனவே சாஸ்திரங்கள் ஒப்புக்கொண்ட விதிப்படியே இவர்களின் ப்ரபந்தம் உள்ளது.

இங்கு மடல் எடுப்பது என்றால் என்ன? நாயகியின் உறவினர்கள் அவளிடம், உன்னுடைய பெண் தன்மைக்கும், அவனது ஆணமைக்கும் நீ மடல் எடுப்பது தகாத செயல். அவனே உன்னை நாடி வரும்படி உள்ள நிலையே பெண்மையின் இலக்கணம், என்று கூறினர். அவர்களிடம் நாயகி, நாயகன் செய்யும் செயல்களால் உள்ளம் கவரப்பட்டு, எனது மனதை இழந்தேன். அவன் தானாகவே வந்து விட்டுப் போகட்டும், அவனுக்காக மடல் எடுக்க வேண்டாம் என்றும் இருந்து பார்த்தேன்.

அதனைத் தாங்க இயலவில்லை. ஆகவே மடல் எடுத்து அவனை அடைந்தால் மட்டுமே உயிர் வாழ இயலும், என்று கண்டித்துப் பேசுவதே மடல் எடுப்பதாகும். மடல் எடுக்க துணிந்த இவள் அதனை எடுக்காமல் தாமதம் செய்வது ஏன் என்றால் – தனது உறவினர்களை தன் பக்கம் மாற்றுவதற்காகவும், அவன் வருவதற்கு அவகாசம் அளிப்பதற்காகவும் ஆகும்.

**....தொடரும்**

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

நம்பெருமாள் திருவடிகளே தஞ்சம்

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

## திருப்பாணாழ்வார் அருளிச் செய்த

# அமலனாதிபிரான்

### தனியன்

ஆபாத சூடம் அனுபூய ஹரிம் சயாநம்
மத்யே கவேரதுஹிது: முதிதாந்தராத்மா
அத்ரஷ்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோ நிச்சிகாய மநவை முநிவாஹநம் தம்

பொருள் – எந்த ஒரு திருப்பாணாழ்வார், காவேரியின் நடுவில் கண்வளரும் பெரியபெருமாளை திருவடி தொடங்கி திருமுடிவரை அனுபவித்து, தனது திருக்கண்கள், அந்தப் பெருமாளைத் தவிர்த்து வேறு எந்த விஷயங்களையும் காணாது என்று உறுதியாகக் கூறினாரோ – அப்படிப்பட்டவரும், லோகஸாரங்கன் என்ற முனிவனைத் தனது வாகனமாகக் கொண்டவரும் ஆகிய திருபாணாழ்வாரை நான் எப்போது சிந்திக்கக் கடவேன்.

## பிள்ளைலோகம் ஜீயர் அருளிச் செய்த தனியன் வ்யாக்யானம்

### அவதாரிகை

(ஆபாதசூடமித்யாதி) இதில் கெருடவாகனனும் நிற்க, அஞ்சிறைப்புட்பாகனையான் கண்டது தென்னரங்கத்தே என்றும் சொல்லுகிறபடியே பெரிய பெருமாளை ஸேவித்து அனுபவித்த முநிவாஹநரை மநஸ்ஸாலே அனுபவிக்கும்படி சொல்லுகிறது. கருடவாஹநத்வமும் சேஷசாயித்வமும் ஸ்ரீய:பதித்வமுமிறே ஸர்வசேஷியான ஸர்வாதிகவஸ்துவுக்கு லக்ஷணம், இப்படி ஸர்வாதிகவஸ்துவினுடைய ஸர்வாவயவங்களையும் ஸக்ரமமாக அனுபவித்தபடி சொல்லுகிறது.

விளக்கம் – இந்தத் தனியனில் கெருட வாகனனும் நிற்க(திருமாலை–10), அஞ்சிறைப் புட்பாகனை யான் கண்டது தென் அரங்கத்தே(பெரிய திருமொழி–5–6–6) என்று கூறுகின்றபடி, பெரியபெருமாளை சேவித்து அனுபவித்தவரும், லோகசாரங்கன் என்ற முனியின் தோள்களில் பெரியபெருமாளின் ஆணைக்கு ஏற்ப அமர்ந்து, அந்த முனியைத் தனது வாகனமாக உடையவரும் ஆகிய திருப்பாணாழ்வாரைத் தான்(இந்தத் தனியன் அருளிச் செய்த பெரிய நம்பிகள்) அனுபவித்ததைக் கூறுகிறார்.

### வ்யாக்யானம்

(ஆபாதசூடம்) திருப்பாதகேசத்தை

(அனுபூய) அமலனாதிபிரானடைவே அனுபவித்து

அமலன் ஆதிபிரான் என்று தொடங்கும் பாசுரம் முதல் அனுபவித்து

(ஹரிம் சயாநம்) ஸ்ரீமாந்ஸ்ˆகஸ்ˆப்த:பரந்தப: என்னும்படியாய்க் கிடக்கை. கிடந்த கிடையிலே உட்குடையசுரயிரெல்லாமுண்டவரிறே. ஹரதீதிஹரி: அநுகூலர் மநஸ்ஸையும் ப்ரதிகூலர் ப்ராணனகளையும் ஹரிக்குமவரென்கிறது. அநுகூலரை த்ருஷ்டி சித்தாபஹாரம் பண்ணும்படியாடிருக்கை. கிடந்ததோர் கிடக்கை கண்டுமெங்ஙனம் மறந்து வாழ்கேன், ஏரார்க்கோலம் திகழக்கிடந்தாய் கண்டேன்

என்னும்படி தாபஹரரானவரை. அவர்தாம், அரவினணை மிசை மேயமாயனாரான முகில் வண்ணரிறே. இப்படி அநுகூல ப்ரதிகூலரக்ஷண சிக்ஷணங்களைப் பண்ணுமவரானவரை.

விளக்கம் – இராமாயணம் ஸுந்தர காண்டம் (38–25) – ஸ்ரீமாந் ஸுக ஸுப்த: பரந்தப: – விரோதிகளை வாட்டும் இராமன் சுகமாகக் கண்வளர்ந்தான் – என்று கூறியபடியே பெரியபெருமாள் சயனித்துள்ளான். நம்மாழ்வார் திருவாய்மொழியில் (7–2–3) கூறியபடி – உட்குடையசுரர் உயிரெல்லாம் உண்ட – இராமன் போன்று அங்குமிங்கும் செல்லாமல், சயனித்தபடியே அனைவரையும் தனது அழகால் வீழ்த்தினான். ஹரதீதிஹரி என்பது நாராயணனைக் குறித்தது. ஹரி என்ற திருநாமம், தன் மீது அன்பு கொண்டவர்கள் மனதையும், தன்னையும் அடியார்களையும் எதிர்ப்பவர்கள் உயிரையும் வாட்டுபவன் என்பதைக் கூறும். இராமாயணம் அயோத்யா காண்டம்(3–29) – த்ருஷ்டி சித்தாபஹாரம் – காண்பவர்கள் கண்ணையும் மனதையும் இராமன் அபகரித்தான் – என்றபடி இவன் இருந்தான். தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலையில் (23) – கிடந்ததோர் கிடக்கை கண்டுமெங்ஙனம் மறந்து வாழ்கேன் – என்றும், நம்மாழ்வார் திருவாய்மொழியில் (5–8–1) – ஏரார்க்கோலம் திகழக்கிடந்தாய் கண்டேன் – என்றும் கூறியது போன்று, தன்னைக் கண்டவர்களின் தாபங்களை நீக்குபவன் என்று கருத்து. இப்படிப்பட்டவன் யார் என்றால், அவன் – ஆதிசேஷன் மீது கண்வளர்ந்தபடி, வியப்பான செயல்களைச் செய்தபடி, நீர் கொண்ட மேகம் போன்ற நிறம் கொண்டபடி உள்ள பெரியபெருமாள் ஆவான். இப்படியாக தன்னுடைய அழகை மட்டுமே கொண்டு அடியார்களையும், விரோதிகளையும் ஒருசேர வீழ்த்துபவன் ஆவான்.

(கவரேதுஹிதுர்மத்யே) கவரேகந்யையான காவேரி மத்யே. கங்கையிற் புனிதமாய காவிரி நடுவு பாட்டிலேயிறே படுகாடு கிடக்கிறது. வண்பொன்னி திருக்கையாலடிவருட திருவாளனினிதாகவாய்த்துத் திருக்கண்கள் வளருகிறது. இப்படி (கவரேதுஹிதுர்மத்யே சயாநம் ஹரிம் ஆபாதசூடம்) என்று குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி வடதிசை பின்புகாட்டித் தென்திசையிலங்கை நோக்கிக் கடல்நிறக் கடவுளெந்தை அரவணைத் துயிலுமா கண்டு அநுபவித்தாரென்கை. (முதிதாந்தராத்மா) இப்படி அநுபவித்து ஹ்ருஷ்டமநாவானார், அகமகிழப்பெற்றார். உவந்தவுள்ளத்தரானார். ஸந்துஷ்ட சித்தஸமாஹிதரானார். ஏமகிழ்ந்தது சிந்தைஎ என்னக்கடவதிறே.

விளக்கம் – கவரேர் என்னும் முனிவனின் பெண் காவேரி ஆவாள். அந்தக் காவேரியின் நடுவில், கங்கையைவிடப் புனிதமான காவேரியின் நடுவில் இவன் சயனித்துள்ளான். குளிர்ந்த காவேரி (வண்பொன்னி – பெருமாள் திருமொழி – 2–3) தனது அலைகள் என்னும் திருக்கரங்களால் இவனது திருவடிகளை வருடியபடி உள்ளாள் (திருக்கையால் அடி வருட – பெருமாள் திருமொழி – 1–1). அந்த வருடலில் தன்னை மறந்து திருவரங்கன் இன்பமாகக் கண்களை மூடியபடி சயனித்துள்ளான். ஆக – கவரேதுஹிதுர்மத்யே சயாநம் ஹரிம் ஆபாதசூடம் – என்பதன் மூலம், தொண்டரடிப்பொடியாழ்வார் தனது திருமாலையில் (19) – குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி வடதிசை பின்புகாட்டித் தென் திசையிலங்கை நோக்கிக் கடல் நிறக் கடவுளெந்தை அரவணைத் துயிலுமாகண்டு – என்று அனுபவித்தது போன்று இவரும் அனுபவித்தார். இவ்விதம் அனுபவித்ததால் ஆனந்தம் சூழ்ந்த மனம் பெற்றார், உள்ளம் மகிழப் பெற்றார். மிகவும் உயர்ந்த உகப்பு அடைந்தார். அமைதியான சீரிய மனம் பெற்றார். பூதத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதியில் (32) – மகிழ்ந்தது சிந்தை – என்றது போல இவரும் இருந்தார்.

இனி அவ்வளவில் நில்லாதே (அத்ரஷ்ருதாம்நயநயோர் விஷயாந்தராணாம்) என்னும்படி காணாக் கண்ணையுடையரானார். அணியரங்கனென்னமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே என்றாய்த்து இவர் விஷயத்திலே அஸ்தமிதாங்யபாவராயிருப்பது, ஏததேவாம்ருதம் த்ருஷ்ட்வாத்ருப்யந்தி: அரங்கமா கோயில்கொண்ட கரும்பினைக் கண்டு கொண்டென் கண்ணிணை களிக்குமாறே, ராமம் மேனுகதா த்ருஷ்டி:, நத்வாபச்யாமி யிறே. ஸௌந்தர்ய ஸாகரத்திலே மக்நரானார், இவர்க்கு அழகு அஜ்ஞாநத்தை விளைத்ததாய்த்து. அத்ருஷ்டம் த்ருஷ்டமாகையாலே த்ருஷ்டம் அத்ருஷ்டமாய்த்து. அன்றிக்கே, சிந்தை மற்றொன்றின் திறத்தல்லா, பாவோ நாந்யத்ர கச்சதி என்னும்படி பரத்வாதிகளாய்த்து பரோக்ஷ விஷயமாகிறதென்னுதல், கட்கிலீ என்னும் வடிவையிறே

கண்ணால் கண்டனுபவித்தது. காணாதவையும் கண்ட வஸ்துவில் உண்டிறே. இப்படி மைப்படி மேனியையனுபவித்து மற்ற விஷயங்களைக் காணாக் கண்ணாயிருக்குமவரைச் சொல்லுகிறது.

விளக்கம் – அத்துடன் மட்டும் நிற்கவில்லை. அரங்கனைக் கண்ட பின்னர் வேறு எதனையும் காணாத கண்களைப் பெற்றவரானர். அணியரங்கனென்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே– என்று இவரே கூறும்படி ஆனார். மற்ற நினைவுகள் அனைத்தும் நீங்கப் பெற்றார். சாந்தோக்ய உபனிஷத் – எததேவாம்ருதம் த்ருஷ்ட்வாத்ருப்யந்தி: – பரம்பொருள் என்ற அமிர்தத்தை கண்களால் பருகுகின்றனர் – என்னும்படி இவர் ஆனார். தொண்டரடிப்பொடியாழ்வார் தனது திருமாலையில் (17) – அரங்கமா கோயில்கொண்ட கரும்பினைக் கண்டு கொண்டென் கண்ணிணை களிக்குமாறே – என்ற நிலையை அடைந்தார். இராமாயணம் அயோத்யா காண்டம்(42–34) – ராமம் மேனுகதா த்ருஷ்டி: நத்வாபச்யாமி – தசரதன் கௌஸலையிடம் இராமன் பின்பாக மட்டுமே தனது கண்பார்வை இருந்தது, உன்னையும் காணவில்லை – என்றது போன்று இவரும் பெரியபெருமாளின் அழகு என்ற கடலில் மூழ்கினார். இந்த அழகில் மூழ்கியதால், மற்ற உலக விஷயங்களில் இவருக்கு அறியாமையே உண்டானது. எளிதில் காணக்கிடைக்காத பொருளைக் காண நேரிட்டதால், எளிதில் காணக்கூடிய பொருள்கள் இவருக்குக் காணாமல் போய்விட்டன. நம்மாழ்வார் திருவாய்மொழியில்(7–10–10) – சிந்தைமற்றொன்றின் திறத்தல்லா – என்று கூறுவது போன்றும், அனுமன் இராமாயணம் உத்தர காண்டத்தில்(40–15) – பாவோ நாந்யத்ர கச்சதி – வேறு எதன் மீதும் எனது சிந்தனை செல்லவில்லை – என்று கூறுவது போன்றும் இவர் அரங்கனின் மீது ஈடுபட்டார். இதனால் கண்களில் தென்படும் மற்றவைகளும் அறியதானது. திருவாய்மொழி(7–2–3) – கட்கிலீ – என்று கூறுவது போன்று, இதுவரை கண்டிராத பெரியபெருமாளை அல்லவா கண்டார். இவரால் காணப்படாத அனைத்து விஷயங்களும் அரங்கனின் திருமேனியில் உள்ளது அன்றோ? இப்படியாக அழகிய மணவாளனின் திருமேனை அழகை அனுபவித்த காரணத்தினால், மற்ற விஷயங்கள் எதனையும் காணாமல் உள்ள இவர் யார்?

**....தொடரும்**